MAY. 57

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



இரண்டு புதுப் புத்தகங்கள்!

1. கழுகும் கிளியும்

கழுகும் கிளியும் என்றுதான் இந்தப் புத்தகத்துக்குப் பெயர். ஆனால் இது இந்தப் புத்தகத்தின் ஒரு கதைக்குத்தான் பெயர். தந்திரக்காரக் கொக்கு, கொலைகார நண்டு, அசட்டுக் கழுதை, குறும்புக்காரக் குரங்கு, அப்பாவிக் கழுகு, ருத்திராக்ஷப் பூனை முதலிய பல வேடிக்கையான கதைகளை இந்தப் புத்தகத்தில் காணலாம்.

பார்த்தால் உங்களுக்குச் சிரிப்புச் சிரிப்பாக வரும் பல படங்கள் இந்தப் புத்தகத்தில் இருக்கின்றன.

விலை 8 அணா

2. என் பேர் என்ன?

ஈக்குத் தன் பெயர் மறந்துவிட்டது. எங்கெல்லாமோ அலைந்து திரிந்து, யாரையெல்லாமோ கேட்டுக் கடைசியில் அது தன் பெயரைத் தெரிந்துகொண்டது. யாரையெல்லாம் கேட்டது, கடைசியில் யார் சொன்னார்கள்? கதையைப் படியுங்கள். பாட்டும் கதையும் படமும் நிறைந்த புத்தகம்.

விலை 3 அணா

அடுத்த வெளியீடுகள்:

தங்கத்தின் பந்து **தவளையும் காளையும்**

நீங்கள் கண்ணன் கழக மெம்பரா? அப்படியானல் உங்களுக்கு கமிஷன் உண்டு!

கண்ணன் காரியாலயம்

மயிலாப்பூர் :: சென்னை - 4.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 2 இதழ்: 5

குழந்தைகளே! .. .. .. பக்கம் 2

சின்னராஜா - 'வாசகன்' 3

கிரிக்கெட் கற்றுக்கொள் - ராம்சிங் .. 9

ஜக்கு துப்பறிகிருன் - 'ஆர்வி' .. 13

பாப்பாவைப் பாரு - கொத்தமங்கலம் சுப்பு .. 19

சாம்பார் சாம்பு - 'நீலம்' 21

வீட்டுக் கணக்கு - கிச்சு 24

கூரைமேல் ஆடு - 'சோமசன்மா' 25

குட்டிக் கதைகள் - ராமசர்மா 29

இரு துருவங்கள் - நா. ஜகந்நாதன் 33

பாதாள பைரவன் - 'சுகுமாரன்' 37

கண்ணன் கழக அங்கத்தினர்கள் 45

தபால் விளையாட்டு - கே. சிதாராமன் .. 47

எண்ணிலே படங்கள் - 'மூட்லட' 48

புத்திசாலி - கல்யாண் 49

கேட்டீர்களா! 52

கண்ணன் தபால் 53

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

தபால் பெட்டி : 604,
மயிலாப்பூர்,
சென்னை, 4.

வருஷ சந்தா
ரூ. 3/-

கலைமகள்
மஞ்சரி
கண்ணன்

குடும்பச் சந்தா
ரூ. 12/-

311780

குழந்தைகளே!

நீங்கள் எல்லாரும் ஆனந்தமாகப் பொழுது போக்குவீர்கள் என்று நம்புகிறேன். பரீட்சைத் தொல்லை முடிந்துவிட்டது. ஆனால் உங்களுக்கு விடுமுறை வந்துவிட்டால் என் பாடுதான் கொஞ்சம் ஆபத்து. என் மேஜை மீது தினம் தினம் வந்து குவியும் கடிதங்களையும் கதைகளையும் பார்க்கும்போதே பிரமிப்பாய் இருக்கிறது; ஆனந்தமாயும் இருக்கிறது.

பல அங்கத்தினர்கள், 'காரம் போர்டு' பரிசின் முடிவுத் தேதியைத் தள்ளிப் போடச் சொல்லி எழுதியிருக்கிறார்கள். விடுமுறையில் சாவகாசமாக எழுதலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய விருப்பத்துக்கு இணங்கி மே மாதம் 31-ஆம் தேதிவரையில் முடிவுத் தேதியை ஒத்திப் போட்டிருக்கிறேன். அதில் உள்ள கதாபாத்திரங்கள் அவ்வளவு பேரும் நீங்கள் எழுதும் கதையில் வர வேண்டும் என்ற அவசியம் இல்லை. அதில் குறிப்பிடாத பாத்திரங்கள் உங்கள் கதையில் வரக்கூடாது. அவ்வளவுதான்.

பரிசுப் போட்டியில் கலந்து கொள்ளாதவர்களும் கலந்து கொண்டவர்களுங்கூட உங்களுடைய ஊரைப் பற்றியோ உங்கள் விடுமுறை நாட்களை எப்படிக் கழித்து வருகிறீர்கள் என்பது பற்றியோ சுவாரஸ்யமாக எழுதி யனுப்பலாம். கட்டுரை எழுதும் பழக்கமும் ஏற்படும்; உங்கள் ஊரைப் பற்றியும் உங்கள் விடுமுறையைப்பற்றியும் மற்றக் கண்ணன் வாசகர்கள் அறிந்துகொள்ளவும் வசதி ஏற்படும். நீங்கள் எழுதியனுப்பும் உறையின்மேல், "வியாசம்" என்று குறிப்பிட வேண்டும். பிரசுரமாகும் கட்டுரைக்குச் சம்மானம் உண்டு.

கண்ணனில் இன்னும் சில புது அம்சங்களைச் சேர்க்க யோசித்து வருகிறோம். சித்திரக் கதை, க்விஸ், வேடிக்கைப் பாட்டுக்கள் முதலியவற்றைச் சேர்க்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். கண்ணன் அங்கத்தினர்கள் எழுதும் சுவாரஸ்யமான விஷயங்களுக்காகச் சில பக்கங்களை ஒதுக்கவும் தீர்மானித்து இருக்கிறோம். கிரிக்கெட் விளையாட்டு முடிந்ததும் கால்பந்து ஆட்டம் ஆரம்பிக்க எண்ணுகிறோம். இப்படி நீங்கள் விரும்புகிற பல பகுதிகள் கண்ணனில் இடம் பெறப்போகின்றன.

கண்ணன் கழகத்தின் அடுத்த கூட்டம் மதுரையில் நடைபெறும். அநேகமாகப் பள்ளிக்கூடம் திறந்த பிறகுதான் நடத்த வேண்டியிருக்கும். கண்ணன் கூட்டத்தை மறுபடியும் சென்னையில் ஒரு முறை சாதாரணமாகக் கூட்டும்படி சென்னை அங்கத்தினர்கள் வற்புறுத்துகிறார்கள். அவர்களுடைய ஆசையையும் பூர்த்தி செய்யவேண்டும் என்றுதான் நாங்கள் கருதுகிறோம். இடம், தேதி முதலியவற்றைப் பின்னர் அறிவிப்போம்.

ஆங்காங்கே கண்ணன் கிளைக் கழகங்கள் ஜரூராக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. பல இடங்களில் தேர்தல்கள் நடைபெறுகின்றன. எல்லா விவரங்களும் கண்ணனில் அவ்வப்போது வெளியாகும்.

—ஆசிரியர்.

1001/1/N5/KN
N5/12.5-6

சின்னராஜா

வாசகன்

5

அபாயம்

நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்த சின்னராஜா விழித்துக் கொண்டான். இன்னும் சூரியன் வானத்தில் எழவில்லை. அவன் காதில் ஏதோ சத்தம் பலமாகக் கேட்டது. அதனால்தான் தூக்கத்தினின்றும் விழித்தான். விழித்தவுடன் பக்கத்தில் ஏதோ குழப்பமான ஆரவாரம் கேட்டது. இன்னும் சற்று நிதானித்தான். கோட்டைக்கு வெளியிலிருந்து ஊது கொம்புகளின் ஒலி கேட்டது. தன்னுடைய அப்பாதான் வந்து விட்டார் என்று அவன் முதலில் நினைத்தான். பரக்கப் பரக்க எழுந்திருந்து மேல் மாடிக்குப் போய் ஜன்னல் வழியாகப் பார்த்தான். அவனுடைய அப்பா வந்திருந்தால் கோட்டை வாசலைத் திறந்து வரவேற்றிருப்பார்களே! இப்போதோ கோட்டை வாசல் மூடியிருந்தது. கோட்டைக்கு வெளியே அகழிக்கு அப்பால் ஆயுதம் தரித்த போர்வீரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

சின்னராஜாவுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஏதோ விசேஷம் இருக்க வேண்டுமென்று தெரிந்ததே ஒழியத் தெளிவாக ஒன்றும் புலப்படவில்லை. கீழே வேகமாக ஓடினான். அரண்மனை வாசலுக்கு வந்தான். அங்கே அதிகமான் அப்போதுதான் அரண்மனைக்குள் நுழைந்து கொண்டிருந்தான். "சின்னராஜா, சின்னராஜா! அபாயம் அபாயம்!" என்று அதிகமான் படபடவென்று பேசினான். சின்னராஜா என்ன என்று கேட்பதற்குள், "கோட்டூர்க்காரர்கள் நம்முடைய கோட்டையை வளைத்துக்கொண்டு விட்டார்கள்" என்று அவனே விஷயத்தை விளக்கினான்.

"என்ன! கோட்டூர்க்காரர்களா!" என்று சின்னராஜா திடுக்கிட்டவனாய்க் கேட்டான்.

"ஆம்; கோட்டூர் ராஜாவுக்கு நம்முடைய கோட்டை மேல் எப்போதும் கண் இருந்தது."

"அப்பாகூட அடிக்கடி சொல்லுவதுண்டே! 'கோட்டூர்ப் பயல் எப்போதாவது வாலை ஆட்டுவான். அப்போது அதை ஒட்ட நறுக்கிவிட வேண்டும்' என்பார்."

"மகாராஜா ஊரில் இல்லை என்பதைத் தெரிந்துகொண்டுதான் இந்த வேலை பண்ணியிருக்கிறான்."

"அது எப்படி, ஒருவருக்கும் தெரியாமல் இப்படி ஆயிற்று?"

என்று சின்னராஜா ஆவலோடு கேட்டான்.

"கொஞ்சம் ஏமாந்து போயிருந்தால் கோட்டூர்க்காரர்கள் கோட்டைக்குள்ளேயே புகுந்திருப்பார்கள். நல்ல வேளை! மகாராஜா ஊரில் இல்லாத போது மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்று எங்கள் அப்பா ராத்திரியெல்லாம் விழித்துக்கொண் டிருந்தார்."

"அவர்கள் வந்தது எப்படித் தெரிந்தது?"

"விடிவதற்குச் சிறிது நேரத்துக்கு முன் கோட்டூர் ராஜா தன்னுடைய ஆட்களுடன் வந்தானும். அவன் வருகிற ஆரவாரம் கேட்ட எங்கள் அப்பா, உடனே இங்குள்ள படைவீரர்களை அந்த அந்த இடத்தில் இருக்கும்படி எச்சரிக்கை செய்தார். வில்லும் கையுமாக அவர்கள் மதிலின்மேல் பதுங்கும் அறைகளில் இருக்கிறார்கள்"

"வந்தவன் என்ன பண்ணினான்?"

"என்ன பண்ணுவான்? தாரை, தம்பட்டை, கொம்பு எல்லாவற்றையும் கொட்டினான். ஊதினான். எங்கள் அப்பா, 'எதற்காக இங்கே வந்து இப்படிச் செய்கிறாய்?' என்று கேட்டாராம்.

"கோட்டையைப் பிடிக்க வந்திருக்கிறோம். பேசாமல் விட்டு விடுகிறீர்களா? இல்லாவிட்டால் முற்றுகையிட்டுக் கைப்பற்றிக் கொள்ளட்டுமா?' என்று பதில் வந்ததாம்."

"அவர்கள் வெளியிலே தானே இருக்கிறார்கள்? அதனால் நமக்கு என்ன?" சின்னராஜா கலவரமடைந்தாலும் தைரியத்தை விடாமல் கேட்டான்.

"கோட்டையைச் சுற்றிலும் ஆட்கள் இருக்கிறார்கள். நாம் எந்த விதத்திலும் கோட்டையை விட்டு வெளியேற முடியாது."

"அதனால் என்ன?"

"நமக்கு அரிசி, பருப்பு எல்லாம் வெளியிலிருந்து வர வேண்டாமா? கோட்டைக்குள்ளே நெல்லா விளைகிறது?"

திடீரென்று சின்னராஜாவின் முகத்தில் ஒளி தோன்றியது. "அப்படியே அவர்கள் கோட்டையைச் சுற்றி நின்றிருக்கட்டும். அப்பா வந்தால் அவர்கள் பாடு திண்டாட்டமாகிவிடும். வெளியிலிருந்து அவர்களை நெருக்குவார். அவர்கள் அகழியில் விழுந்து செத்துப் போக வேண்டியதுதான்" என்று சிறிது ஊக்கத்துடன் கூறினான்.

"அதெல்லாம் சரி; மகாராஜா அவ்வளவு சீக்கிரம் வந்துவிடுவாரென்று எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்? சோழ மகாராஜா ஏதோ பெரிய காரியத்தை எண்ணித்தான் இவரை அழைத்திருக்கிறார். எங்கே சண்டைக்கு ஏற்பாடு நடக்கிறதோ? அதையெல்லாம் முடித்துக்கொண்டு அவர் திரும்பி வர எத்தனை நாள் ஆகுமோ! அதுவரையில் நாம் தாக்குப் பிடிக்க வேண்டுமே!"

"உன்னுடைய அப்பா நம் வீரர்களைக் கொண்டு இந்தப் பயல்களை ஓட்டி விடலாம் அல்லவா?"

"அது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. மகாராஜா இங்குள்ள படை வீரர்களை யெல்லாம் தம்முடன் அழைத்துக் கொண்டு போயிருக்கிறார். இங்கே சிலர் மாத்திரம் இருக்கிறார்கள். இன்னும் நீ அவர்களைச் சரியாகப் பார்க்கவில்லை போலிருக்கிறது."

"நான் ஜன்னல் வழியே பார்த்தேன். நன்றாகக் கவனிக்கவில்லை. வா; அந்த மதில் மேடை மேல் ஏறிப் பார்க்கலாம்" என்று சின்னராஜா கூப்பிட்டான். அதிகமான் அவனை அழைத்துக் கொண்டு சென்றான்.

படிக்கட்டின் வழியே இருவரும் ஏறினார்கள். மேடையில் ஏறி ஒரு துவாரத்தின் வழியே இரண்டு பேரும் பார்த்தார்கள். கோட்டூரைச் சேர்ந்த வீரர்கள் அகழிக்கு அப்பாலே அணி அணியாக நின்றிருந்தார்கள். குதிரைகள் பல நின்றன.

"அதோ பார், அதோ, அந்த மனிதனைப் பார்" என்று சின்னராஜா கூவினான். அதிகமான் கவனித்தான். காட்டில் சந்தித்த குதிரைக்காரன்! அவன் அங்கே நின்றுகொண்டு வண்டிக்காரனிடம் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தான்.

"இந்த மனிதனைத்தானே நேற்றுக் காப்பாற்றினோம்?" என்றான் சின்னராஜா.

"ஆம்; அதே ஆசாமிதான். அப்போதே நாம் சந்தேகித்தது சரியாகப் போய்விட்டது. நல்ல வேளை! அவன் நம்மை ஒன்றும் செய்யாமல் போனானே!"

சின்னராஜா இதைக்கேட்டுச் சிரித்தான். "போடா பயந் தாங்கொள்ளி. அந்த முரட்டுத் திருடர்களே நம்மைக் கண்டு ஓடிப்போய் விட்டார்கள். இவன் என்ன செய்வான்? நம் மிடம் அம்பும் வில்லும் இருக் கிற வரைக்கும் யாருக்கும் பயப் பட வேண்டாம்" என்று நிமிர்ந்து பேசினான்.

"இப்போதுதான் நினைவுக்கு வருகிறது. அவன் பையில் இருந்த ஓலை நறுக்கு என்னி டம் இருக்கிறதே!"

"இருக்கிறதா? எங்கே எடு!"

"உனக்குத்தான் அதை வாசிக்க முடியவில்லையே!"

இதைக் கேட்டவுடன் சின்ன ராஜாவுக்குச் சுறுக்கென்றது.

"வாத்தியாரிடம் காட்டி என்ன எழுதியிருக்கிறதென்று தெரிந்து கொள்வோமே!" என் ருன் அவன். அதிகமான் தன் இடுப்பில் செருகிவைத்திருந்த ஓலை நறுக்கை எடுத்துக் கொடுத் தான். சின்னராஜா அரண் மனைக்கு வந்து அவசர அவசர மாக முகத்தை அலம்பிக்கொண் டான். ஒன்றும் சாப்பிடத் தோன்றவில்லை.நேரேவாத்தியா ரைப் பார்க்கப் புறப்பட்டான்.

வாத்தியார் சின்னராஜாவைக் கண்டவுடன், "ஏது, ஆச்சரிய மாக இருக்கிறதே! நீ என்னைத் தேடிக்கொண்டு வருகிருயே; என்ன சமாசாரம்? ராணி ஏதா வது சொன்னர்களா?" என்று கேட்டார்.

சின்னராஜா, "இதில் என்ன எழுதியிருக்கிறதென்று பார்த் துச் சொல்ல வேண்டும்" என்று பணிவோடு ஓலை நறுக்கை நீட்டினன். அதை வாத்தியார் வாங்கிப் பார்த்தார். இரண்டு பக்கத்தையும் புரட்டிப் புரட்டிப் படித்தார். அவர் கண் கள் விரிந்தன. "இது ஏது? எங்கே கிடைத்தது?" என்று கேட்டார்.

சின்னராஜா முதல் நாள் நடந்ததையெல்லாம் ஒன்று விடாமல் சொன்னன். பிறகு, "இதில் என்ன எழுதியிருக் கிறது?" என்று கேட்டான்.

"கோட்டூர் ராஜா எழுதி யிருக்கிருர்?"

"யாருக்கு?"

"கூத்தூர் ஜமீன்தாருக்கு. அந்த இரண்டு பேரும் உங்கள் அப்பாவுக்கு விரோதி என்று தெரியுமல்லவா? அவ்வூர்ப் பாதையில் ராத்திரி நடுஜாமத் தில் நாற்பது குதிரை வீரர்க ளுடன் தம்மை வந்து சந்திக் கும்படி கோட்டூர் ராஜா எழுதி யிருக்கிருர். இதை நேற்றே என்னிடம் கொடுத்திருந் தால்—"

"இதற்கும் நமக்கும் என்ன சம்பந்தம்?"

வாத்தியாருக்குக் கொஞ்சம் கோபம் வந்தது. அதை அவர் அடக்கிக்கொண்டார். "இந்தக் கோட்டையை முற்றுகையிடத் தான் அந்தக் குதிரை வீரர் களின் துணையைக் கேட்டிருக்கி ருர். இது நேற்றே தெரிந்திருந் தால் இரவோடு இரவாக உங் கள் அப்பாவுக்கு ஆள் அனுப்பி யிருக்கலாம். அவர் இவ்வளவு நேரத்தில் வந்து இந்த ஆட்களைத் துவம்சம் செய் திருப்பார். நாமும் ஜாக்கிரதை யாக இருந்திருக்கலாம்."

சின்னராஜாவுக்கு இப்போது விஷயம் தெளிவாக விளங்கி விட்டது. கோட்டூர் ராஜா கூத்தூர்க்காரரையும் சேர்த்துக் கொண்டு ஆலூர்க் கோட்டையை முற்றுகையிடச் சமயம் பார்த்திருக்கிறான். ஆலூர் அரசர் மார்த்தாண்டர் ஊரில் இல்லையென்றும், அவருடன் அவருடைய படைகளும் போயிருக்கின்றன வென்றும்



தெரிந்தவுடன் தங்கள் கருத்தை நிறைவேற்ற ஆரம்பித்திருக்கிறான். குதிரைக்காரன் இந்தச் செய்தியை அறிவிக்கவே வந்திருக்கிறான். இது முன்பே தெரிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்!

சின்னராஜாவுக்கு அழுகை வரும்போல் இருந்தது. 'என்னைப் போன்ற முட்டாள் உலகத்திலே இல்லை' என்று நினைத்தான். எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளாமல் இருந்தது எவ்வளவு அபாயமானது என்பதை இப்போது நன்றாக உணர்ந்தான். வாத்தியார் கையில் ஒரு சவுக்கைக் கொண்டு வந்து கொடுத்து, "உங்கள் மனசு போல என்னை அடித்துப் புத்தி புகட்டுங்கள்" என்று சொல்லலாம் என்றுகூடத் தோன்றியது. வாத்தியாருக்கு வேட்டையாடத் தெரியாது என்று ஏளனமாகப் பேசினானே, அதையெல்லாம் நினைத்துப் பார்த்தான்.

"என் அப்பா, நின்றுகொண்டிருக்கிறாய்?" என்று வாத்தியார் கேட்டபோதுதான் அவனுக்கு அப்போதைய ஞாபகம் வந்தது.

"நான் சாப்பிட்டுவிட்டு மறுபடி வருகிறேன்" என்று ஈன சுரத்தில் சொன்னான்.

"ஏன், என்ன விசேஷம்?" என்று கேட்டார் வாத்தியார்.

"பாடம் படிக்க" என்று தலையைக் குனிந்தபடியே சின்ன ராஜா சொன்னான்.

"இன்றைக்கு நீ பெரிய விஷயத்தைக் கற்றுக் கொண்டு விட்டாயே! நம்முடைய கோட்டை எதிரிகளிடமிருந்து தப்பட்டும். பிறகு வாசித்துப் புத்திசாலியாகலாம்" என்றார். அவருக்கு எத்தனை வருத்தமும் கோபமும் உள்ளத்துக்குள் இருந்தன என்பதைச் சின்ன ராஜா தெரிந்துகொண்டான். அவன் கண்ணில் நீர் துளித்தது.

'எத்தனை தரம் வாத்தியார் நமக்குப் புத்தி சொல்லியிருக்கிறார்! அப்போதெல்லாம் நாம் கவனித்தோமா? படித்தோமா? புத்திசாலித்தனமாகப் படித்திருந்தால் இன்றைக்கு நம்முடைய கோட்டைக்கு இந்தக் கதி வந்திருக்காதே! இப்போது படிப்பின் கௌரவம் எவ்வளவு நன்றாகத் தெரிகிறது!' இப்படியெல்லாம் யோசித்துக் கொண்டே நடந்தான்.

'இனிமேல் நாள் தவறாமல் பாடம் படிக்கவேண்டும். இதுவரைக்கும் படிக்காமல் போனதற்கும் சேர்த்துப் படிக்க வேண்டும். வாத்தியாரே நம்மை மெச்சும்படி கெட்டிக்காரனாக வேண்டும்' என்று தீர்மானித்துக் கொண்டான்.

அவன் அரண்மனைக்குள் நுழையும்போதே அவன் தாய் அவனை எதிர்கொண்டழைத்தாள். "உன்னைக் காணோமே என்று கவலையாக இருந்தது. நீ எங்கே போயிருந்தாய்?" என்று கேட்டாள்.

"வாத்தியாரிடம் போயிருந்தேன்."

இதைக் கேட்டவுடன் அவளுக்குத் தன் பிள்ளை கல்வியிலே கருத்தாக இருக்கிறானென்று உள்ளூற ஒரு திருப்தி ஏற்பட்டது.

"பகைவர்கள் கோட்டையை முற்றுகையிட்டுக் கொண்டார்கள். என்ன ஆகப்போகிறதோ! உங்கள் அப்பா வெளியூருக்குப் போயிருக்கிறார். அவருக்கு இவ்விடத்துச் சமாசாரம் தெரியுமோ, தெரியாதோ!" என்று துயரம் நிறைந்த குரலுடன் அவள் பேசினாள்.

"அப்பா வந்துவிடுவார் அம்மா" என்றான் சின்னராஜா.

அவன் உள்ளே போனான். 'அம்மா நாம் நன்றாகப் படிப்பதாக அல்லவா எண்ணிக்கொண்டிருக்கிறாள்! நாம் அவளை ஏமாற்றி வருகிறோம். நம்முடைய முட்டாள்தனத்தை அவள் தெரிந்துகொண்டால் எவ்வளவு வருத்தப்படுவாள்! அவள் தெரிந்து கொள்வதற்கு முன்பே நாம் கல்வியிலே தேர்ச்சி பெறவேண்டும்!' இப்படி அவன் மனசிலே உறுதி பூண்டான். கோட்டையைப் பகைவன் முற்றுகையிட்டிருக்கிறானே, அதுகூட அவனுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. தன்னுடைய முட்டாள்தனந்தான் அவனுக்குப் பெரிய அபாயமாகத் தோன்றியது.

(தொடரும்)



கிரிக்கெட் கற்றுக் கொள்

லேட் - கட்
(LATE CUT)

1. பொதுவான ஆரம்ப நிலை.



2. ஆப் ஸ்டம்புக்கு வெளியே விக்கெட்டின் உயரத்துக்குச் சரியாகப் பந்தை அடிக்கத் தயாராக இருக்கிறார்.



3. பந்தையே அவர் கண்கள் கூர்ந்து கவனிக்கின்றன.



4. அவருடைய பின்னங்கால் பாதம் பந்து இருக்கும் திசையில் செல்லுகிறது. அந்தக் காலை ஊன்றியபடி தான் பந்தை அடிக்க வேண்டும்.



5. பின்னங்கால் பாதம் பந்துக்குச் சரியாக இன்னும் நகர்ந்து வந்திருக்கிறது. அவருடைய உடம்பு நன்ருக வளைந்திருப்பதையும் அவருடைய முழங்காலையும் கவனியுங்கள். பந்து வாட்டமாக வரவேண்டுமே.



6. அவருடைய கைகள் சேர்ந்து மட்டையை வலுவாகப் பிடித்திருக்கின்றன. கிரீஸுக்குத் தாராளமாகப் பின்ஞலேயே அவர் பந்தை அடித்துவிடுகிருர். இந்த மாதிரி மட்டையைக் கவிழ்த்துப் பிடித்துக் கொண்டால்தான் பந்து அடிபடும்.

7. பின்கால் விரல்கள் பந்தை அடிக்கும் திசையை நோக்கி இருக்கின்றன. தலை நன்றாகக் குனிந்திருக்கிறது. மணிக்கட்டுகள் பலமாய் அடிக்கத் திருகிக் கொண்டிருக்கின்றன.



8. பந்தை அடித்தாகி விட்டது. உடலும் காலும் அந்தத் திசையிலேயேதான் இன்னும் இருக்கின்றன. இல்லாவிட்டால் கீழே விழுந்துவிடுவார்.

ஜக்கு துப்பறிகிறான்

'ஆர்வி'

ஜக்கு அருணாசலத்தின் முகத்தைப் பார்த்தான். அருணாசலம் அவன் முதுகில் தட்டிக்கொடுத்து, "இனி நீ போகலாம். சாவிதான் என்னிடம் இருக்கிறதே. நீ எதற்கும் பயப்படவேண்டியதில்லை!" என்று ரகசியமாகச் சொன்னார்.

ஜக்கு உள்ளே ஓடிப்போய் மாமியிடம் சொல்லிக்கொண்டு காரில் ஏறிக்கொண்டான். அருணாசலமும் வண்டியில் ஏறிக்கொண்டார். டிரைவர் இதை ஆட்சேபிப்பதற்குள், "நான் பாலத்தடியிலேயே இறங்கிவிடுவேன்" என்று முன்னதாகவே சொல்லிக் கொண்டார்.

கார் புறப்பட்டுச் சென்றது. நந்து தன் வீட்டு மாடியில் நின்றபடி இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தான். மோட்டார் பாலத்தின் அருகே சென்றபோது அங்கே இரண்டு போலீஸ்காரர்களும் இரண்டு ஆட்களும் நின்று பேசிக்கொண்டிருந்ததை ஜக்கு பார்த்தான். அந்த இடத்தில், "அப்பா, டிரைவர்! காரை நிறுத்திக்கொள். நான் இங்கேயே இறங்கிவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு அருணாசலம் இறங்கிக்கொண்டார். ஜக்குவின் காதருகில், "நீ பயப்படாமல் போ. நான் உன் பின்னாலேயே இருப்பேன்" என்று மெள்ளச் சொல்லிவிட்டுப் போனார்.

"தம்பிங்களா! என்னையே காலையிலிருந்து இவ்வளவு நேரம் டபாய்ச்சிட்டுத்தானே வந்தீங்க! இவ்வளவூண்டு இருந்துக்கினு இந்த வயசிலேயே நம்ப கண்ணிலே விரலைக் கொடுத்து ஆட்டிப்புட்டீங்களே!" என்றான் டிரைவர்.

"எங்களுக்குப் பள்ளிக்கூடம் இல்லையா? உள்ளே போனதும் வாத்தியார் விட்டால்தானே நாங்கள் வரமுடியும்?" என்றான் ஜக்கு.

கார் இதற்குள் அந்தப் பிரம்மாண்டமான மாறனேரி ஜமீன்தார் பங்களாவுக்குள் நுழைந்தது. அவர்கள் வாசல்புறத்தில் இறங்கியதும் அங்கிருந்த அணில், "கீ, கீ" என்று கத்தியது.

ஜக்குவும் உல்பும் படிக்கட்டுகளில் தாவித்தாவி ஏறி உள்ளே சென்றார்கள். டிரைவரும் பின்தொடர்ந்து வந்தான். மாடிப் படிக்கட்டுகளின் பக்கத்திலிருந்த ஜன்னலையும் மேலே மாட்டியிருந்த கத்திகளையும் ஜக்கு அண்ணாந்து பார்த்தான். கொய்யாமரத்து அணில் மறுபடியும் அவனைப் பார்த்துவிட்டுக் கத்தியது.

டிரைவர் மாடியில் ஏறப் போன ஜக்குவிடம், "அங்கே போகாதே. இப்படி என் னேடே வாங்க" என்று உட் புறம் பல அறைகளையும் பல கூடங்களையும் தாண்டி அவர் களை அழைத்துச் சென்ருன்.

ஓர் அறைக்குள் சென்றதும் ஜக்கு போகிற போக்கில் மின் சார விசிறியின் பித்தானைப் போலிருந்த திருகை டிரைவ ருக்குத் தெரியாமல் திருகி வைத்துவிட்டுப் போனுன்'

அடுத்த கணம், 'தடால்' என்று எங்கேயோ ஒரு பெரிய ஓசை கேட்டது. டிரைவரும் உல்பும் இதன் காரணம் தெரியாமல் திடுக்கிட்டார்கள். ஜக்குவோ ஒன்றும் அறியாதவனைப் போல அவர்களுக்கு முன்னுல் போய் நின்ருன்.

டிரைவர் அவர்களை வெளிச் சம் இல்லாத ஓர் அறைக்குள் அழைத்துக்கொண்டு போனுன். அங்கே போனதும் எங்கி ருந்தோ குளிர்ச்சியான காற்று

"இதோ, இவர்கள் தான்!" என்று கைப்பிடியாக அவர்களை அவன் கையில் ஒப்படைத்தான்.

அந்த முரடன் சினிமாவில் பார்க்கும் சிவப்பு இந்தியனைப் போல இருந்தான். முண்டும் முரடுமான முகம்; பயங்கரமான பார்வை; கம்பளிப் பூச்சிகள் அடர்ந்த பூவரசங்கிளை போன்ற முரட்டுக் கைகள், கால்கள். அவனுடைய மொட்டைத் தலையையும் ஆஜானுபாகுவான தோற்றத்தையும் கண்டு உல்பு நடுநடுங்கிப் போனான்.

அந்த முரடன் ஒன்றுமே பேசாமல் இடுப்பில் இருந்த இரண்டு கறுப்புத் துணிகளை வெளியில் எடுத்தான். முதலில் ஜக்குவின் முகத்தைத் திருப்பி அவன் கண்களை மறைத்து ஒரு துணியைப் போட்டு இறுகக் கட்டினான். அடுத்தபடியாக உல்பின் கண்களையும் கட்டினான்.

டிரைவர், "நான் போகட்டுமா?" என்று கேட்டான்.

அந்த முரட்டு ஆத்மா, "உம்" என்று உறுமியது. டிரைவர் பழையபடி அந்த இரும்புக் கதவை மூடிக்

சிலு சிலுவென்று வந்து கொண்டிருந்தது. உல்பு பயத்தினாலோ, பிரமிப்பினாலோ ஜக்குவின் கையை இறுகப் பிடித்துக் கொண்டான். டிரைவர் முன்னால் நுழைந்து அங்கே தெரிந்த ஜன்னலை மெதுவாகத் தள்ளினான்.

"கர்..ர்..ர்..ர்" என்ற பெருத்த சத்தத்துடன் அந்த இரும்பு ஜன்னலையுடைய கதவு திறந்துகொண்டது. அங்கே பெரிய முரடனைப்போல் ஓர் ஆள் நின்றுகொண்டிருந்தான்.

டிரைவர் அவனிடம்,

கொண்டு வெளியில் போனான் என்பதை ஜக்குவும் உல்பும் ஊகித்தார்கள். அருணாசலம் சொன்ன தைரியத்தினால் ஜக்கு வாயைத் திறக்கவில்லை. உல்பு மட்டும், 'பே, பே..' என்று உளறத் தொடங்கினான். இருந்தாலும் ஜக்கு தைரியத்துடன் இருப்பதைப் பார்த்து அவனும் வாயை மூடிக்கொண்டான். அந்த முரடனுடைய இரண்டு இரும்புக் கைகளும் அவர்களுடைய கைகளைப் பற்றிக் கொண்டன. தட்டுத் தடுமாறிக் கொண்டே அவர்கள், அவன் இழுத்துக்கொண்டு போன பக்கமாகச் சென்றார்கள். பல படிக்கட்டுகளில் ஏறி, பல படிக் கட்டுகளில் இறங்கி, கடைசியாக ஓர் இடத்தில் வந்து நின்றார்கள்.

அங்கு வந்ததும் அந்தச் சிலு சிலுத்த காற்று வீசவில்லை. அந்த அரைமணி நேரமும் அவர்களுடைய மனம் பட்ட பாட்டை யாராலும் வர்ணிக்கவே முடியாது. ஏதோ பழைய காலத்து அற்புதக் கதைகளில் நடப்பதுபோல அந்தச் சம்பவம் இருந்தது. உல்பு எப்படி எண்ணினானே என்னவோ! ஆனால் ஜக்குவுக்கு இதெல்லாம் ஒரு பக்கம் வேடிக்கையாகக் கூட இருந்தது. பெரிய வீராதி வீரன் போல, கதாநாயகனைப் போல அவன் நிமிர்ந்து, கம்பீரமாக நின்றான். முரட்டுக் கைகள் நழுவின.

"இந்தப் பயல்கள்தானா?" என்று கட்டைக் குரலில் யாரோ கேட்டார்கள்.

அந்த முரடன், 'ஆமாம்' என்பது போல மறுபடியும் உறுமினான்.

"சரி; அந்தச் சாட்டையை என்னிடம் கொடுத்துவிட்டு நீ போகலாம்" என்று அந்தக் கட்டைக் குரல் உத்தரவிட்டது.

இரண்டு நிமிஷம் ஆயிற்று. அந்த முரடன் போயிருப்பான் என்று தோன்றியது.

"ஜக்கு என்ற பயல் உங்களில் யாரடா?"

"நான்தான்" என்று மார்பைத் தட்டினான் ஜக்கு.

"சரி; உன் கண் கட்டை மட்டும் அவிழ்த்துக்கொள்!" என்ற உத்தரவு வந்தது.

ஜக்கு கட்டைத் தள்ளிவிட்டுக் கொண்டு கண்களைத் திறந்தான். அங்கு எரிந்த விளக்கு வெளிச்சத்தில் அவன் கண்கள் கூசின. எதிரே குத்துக் குத்து மீசையும் கையில் சாட்டையுமாக ஒரு பெரிய மனிதர் நின்றுகொண் டிருந்தார். அவர்தான் அந்தக் காரின் சொந்தக்கார ரெட்டியாராக இருக்கவேண்டும் என்று ஜக்குவுக்குத் தோன்றியது. அவரை முதல் நாள் அவன் பார்த்திருக்கிற ஞாபகம் இருந்தது.

அந்த மனிதரே அசந்து போகும்படியாக, "நீங்கள் தான் ஸ்ரீமான் ரெட்டியார் அவர்களா? நீங்கள் கூப்பிட்டதாக டிரைவர் எங்களை அழைத்து வந்தான். நாங்கள் பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவர்கள். எங்களை நீங்கள் அழைத்திருக்கவேண்டிய காரணமே ஒன்றும் இல்லை. ஆனல்

அழைத்துவரச் சொன்னதோடு இல்லாமல், எங்கள் கண்களைக் கட்டி, கையில் சாட்டை ஒன்றைக் காட்டிப் பயமுறுத்துகிறீர்கள்? இது நியாயமா?" என்று கணீர் என்ற குரலில் கேட்டான் ஜக்கு.

அந்த மனிதர், "சரிதாண்டா வாலு! வாயை மூடு! அதிகப் பிரசங்கி. ரொம்ப நியாயத்தைக்

உல்பு கட்டை அவிழ்த்துக் கண்களைக் கசக்கிக்கொண்டு ஜக்குவின் பின்னால் போய் நின்றான். அந்த அறை ஜகஜ்ஜோதியாகப் பிரகாசமாக இருந்தது. அந்த இடம் எது என்று தெரியவில்லை. அவர் என்ன செய்யப் போகிறார், என்ன கேட்கப் போகிறார், எதற்காக அழைத்து வந்திருக்கிறார்—ஒன்றுமே

கண்டவன் பாரு. திருட்டுப் பயல்! பள்ளிக்கூடத்தில் படிக்கிற பையனுடைய மூஞ்சியைப் பாரு!" என்று சாட்டையைச் சொடுக்கினார்.

உல்பு, "ஓ" என்று உளறியடித்துக்கொண்டு கூவினான்.

"நீயும் கட்டை அவிழ்த்துக் கொள்!" என்று உத்தரவு வந்தது.

தெரியவில்லை. ஆனால் ஜக்குவைப் பார்த்தாவது தானும் தைரியமாக இருக்கவேண்டும் என்று உல்பு பேசாமல் நின்றான்.

"உன் பேர் என்னடா?"

"உல்ப்....நாகராஜன்!"

"சரியான பேர்தாண்டா உல்ப்! உன் பூனைக் கண்ணும்



வாத்தியார்: காற்று, தண்ணீர் இந்த இரண்டில் எது அதிக உபயோகம்?

பால்காரன் மகன்: தண்ணீர்தான், ஸார்!

செம்பட்டைத் தலையும்! ரொம்பப் பொருத்தம்டா!''

இதற்குள் கிணு கிணு என்று மேஜைமேல் இருந்த டெலிபோன் மணி ஒலித்தது. அந்த ரெட்டியார் போன் ரிஸீவரை எடுத்தார். அவருடைய முகத்தோற்றம் வரவரச் சுருங்கியது. பயத்தினாலும் கோபத்தினாலும் அவருடைய புதர் மீசை கிடுகிடென ஆடியது.

அவர் ரிஸீவரை டக்கென்று கீழே வைத்துவிட்டு, ''அந்தச் சாவியை மரியாதையாக என்னிடம் கொடுத்துவிடு. ஒன்றும் செய்யமாட்டேன். சாவியை மட்டும் கொடுக்கவில்லையோ, உன் தோலை இங்கேயே உரித்துவிடச் சொல்லுவேன்'' என்றார்.

''சாவியா? என்னிடம் இல்லையே!'' என்றான் ஜக்கு.

அவ்வளவுதான்; ரெட்டியார் ரௌத்திராகாரமான கோபத்தோடு, சாட்டையைச் சொடுக்கிக்கொண்டே, ''டேய், பொய்யா பேசுகிறாய்?'' என்று எகிறிக் குதித்தார்.

''ஐயா! சாவி என்னிடம் இருந்தது. அது உண்மைதான். ஆனால் நான் இங்கு வருவதற்குக் கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் அருணாசலம் என்ற ஒருவர் வந்தார். சாவியைக் கேட்டு வாங்கிக்கொண்டு போனார். இதுதான் எனக்குத் தெரியும்!'' என்றான் ஜக்கு.

'சொடேர்' என்று ரெட்டியார் சாட்டையைச் சுழற்றி அடித்தார். ஆனால் அந்தச் சாட்டை மேஜையின் காலைச் சுற்றிக் கொண்டது.

உல்பு மீண்டும் சத்தம் போட்டான்.

இதற்குள் படபடவென்று கதவை யாரோ தட்டினார்கள். ரெட்டியார் திருதிருவென்று விழித்தார். எதிர்ப்புறமிருந்த கதவைத் திறந்தார். உடனேயே திரும்பிவிட்டார். அங்கே இரண்டு போலீஸ் ஜவான்கள்!

இந்தப் பக்கத்துக் கதவை ஜக்கு திறந்துவிட்டான். இங்கும் இரண்டு ஜவான்கள்!

ரெட்டியாரின் முகத்தைப் பார்க்கவேண்டுமே!

(தொடரும்)

பாப்பாவைப் பாரு

கொத்தமங்கலம் சுப்பு

பையன்: பள்ளிக்கூடம் போகாமலே படிக்கிறன் - அம்பி
பாட்டுச் சொல்லிக் கொள்ளாமலே பாடுறன்.
அம்மா அம்மா பாப்பாவைப் பாரு!

பாட்டுப் பாடறன், மோட்டாரு ஓட்டறன்,
பலூனைப் பாக்கிறன், பல்லில்லாமே சிரிக்கிறன்.

அம்மா: சும்மா இரு, பக்கத்திலே,
தொட்டுக்கிட்டுக் கட்டாதே.

பையன்: ரேடியோவைக் கேட்டுப்புட்டு ஆடுறனம்மா,
தாளம் போடுறனம்மா, நீள நீஞ்சுறனம்மா!

அம்மா: சும்மா இரு பக்கத்திலே,
தொட்டுக்கிட்டுக் கட்டாதே.

பையன்: மோட்டார் காரு ஆரன்போல
முனங்குறனம்மா;

ஏரோப்பிளேனு போலக் கையை
வீசுறனம்மா,

இரண்டு காலும் சைக்கிள் விட்டு
இழுக்கிறனம்மா,

என்னை என்னைப் பாத்துப் பாத்துச்
சிரிக்கிறனம்மா!

அம்மா: சும்மா இரு பக்கத்திலே,
தொட்டுக்கிட்டுக் கட்டாதே!

பையன்: காக்காயைப் பாத்துப் பாத்துக்
கையை நீட்டுறன்,

காசையெல்லாம் கீழே போட்டுக்
கையால் தள்ளுறன்,

நாக்காலே மண்ணை யெல்லாம்
நக்கித் திங்கறன்,
நப்புக் கொட்டி விரலைப்போட்டுச்
சப்பிக் கொள்ளுறன்.

மூக்காலே தரையைத் தொட்டு
மோந்து பார்க்கிறன்,
முன்னும் பின்னும் நீஞ்சித் தலையை
முட்டிக் கொள்ளுறன்

நீஞ்சறன்—நிமிநறன்—விழுகிறன்—அழுவுறன்,
நீயும் வந்து பாரு அம்மா பாப்பாவை!
"சீ நாயே!" என்று சொன்னால்
சிரிச்சுக் கொள்ளுறன்,

செல்லம் கொஞ்சித் தூக்கப்போனு
சிணுங்கிக் கொள்ளுறன்.

அம்மா: சும்மா இரு, சும்மா இரு,
தொட்டுக்கிட்டுக் கட்டாதே!

பையன்: பாப்பாவுக்குப் பல் முளேச்சா
பப்ரமிண்டைக் கடிக்குமா?

பாப்பாவுக்கு நடக்க வந்தா
பள்ளிக்கூடம் போகுமா?

பாப்பாவுக்கு ஏ பி ஸீ டீ
பாடம் படிக்க வருதுமா?

பாப்பாவுக்கும் ரேஷன் கார்டு,
பஸ்ஸில் காசு கேப்பானு?
அம்மா அம்மா பாப்பாவைப் பாரு!

அம்மா: பாப்பாவாக இருக்குமட்டும்
பாக்கியந்தாண்டா . அவனுக்குப்
பல் முளேச்சா பப்பரமிண்டில்
பங்கு கேப்பாண்டா!

சாம்பார் சாம்பு

'நீலம்'

'வித்தியா நிகேதனம்' மிகவும் சிறந்த பாடசாலை என்று பிரசித்திபெற்றிருந்தது. இதில் சேர்ந்து படிக்கும் மாணவர்கள் ஒருபோதும் சோடை போனதில்லை. தங்களுடைய பிள்ளைகளை இந்தப் பாடசாலையில் சேர்க்கப் பெற்றோர்கள் பெரும்பாடு படுவார்கள். ஆனல் மாணவர்களை நன்ருகப் பரீட்சை செய்து, தகுதியாக இருப்பவர்களையே இங்குள்ள உபாத்தியாயர்கள் பொறுக்குவது வழக்கம்.

மாணவர்களைப் பரீட்சை செய்ய மூன்று உபாத்தியாயர்கள். இவர்களில் முக்கிய மானவர் சாம்பு. பையன்களைக் கேள்விகள் கேட்பவர் அவர்தான். பள்ளிக்கூடத்தில் சேர வரும் மாணவர்கள் ஒவ்வொரு கோஷ்டியாக அந்த உபாத்தியாயர்கள் முன்பு வந்து நிற்பார்கள். சாம்பு கேட்கும் கேள்விகளுக்கு மாணவர்கள் பதில் சொல்லுவதையெல்லாம் மற்ற இரண்டு உபாத்தியாயர்களும் குறிப்பெடுத்துக் கொள்வார்கள். கடைசியில் மூன்று பேரும் ஒன்றுகூடிப் பேசிய பிறகு சேர்த்துக்கொள்ளக் கூடிய பையன்களின் பெயர்களை நோட்டீஸ் போர்டில் ஒட்டச் சொல்லுவார்கள்.

தவளையார்: கிராமத்தில் குளத்திலேயும் ஏரியிலேயும் தண்ணியில்லேன்னு இங்கே டவுனுக்கு வந்தா குழாயிலே இருபத்தினாலு மணி நேரமும் தண்ணியே வரல்லையே! வர வரக் காலம் பஞ்ச காலமாக இருக்கிறதே!

சாம்பு வாத்தியார் சற்றுக் கிண்டல் பேர்வழி. பாடம் சொல்லிக்கொடுப்பதில் திறமைசாலிதான்; அதேபோலப் பையன்களைக் 'கோட்டா' பண்ணித் திணற அடிப்பதிலும் பெயர் பெற்றவர். இது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் குருவை மிஞ்சிய சிஷ்யன் ஒருவன் அவருக்கு ஏற்பட்டதுதான் ஆச்சரியம்!

கோடை லீவு முடிந்து 'வித்தியா நிகேதனம்' திறந்தது. புதிய மாணவர்களைச் சேர்க்க ஆரம்பித்தார்கள். வழக்கம்போல, சாம்பு வாத்தியார் மாணவர்களைக் கோஷ்டி கோஷ்டியாகப் பரீட்சை அதிகாரிகள்முன் வரச் சொன்னார்.

முதல் கோஷ்டி மாணவர்கள் ஆறு பேர் வந்து நின்றனர். அவர்கள் ஒவ்வொருவரையும் பல விதமான கேள்விகளைக் கேட்டார் சாம்பு.

முதல் கோஷ்டி, இரண்டாம் கோஷ்டி என்று வரிசை வரிசையாக மாணவர்கள் வந்தார்கள். மூன்று கோஷ்டி பேட்டிக்குக் காத்து நின்றன.

இந்தப் பதினெட்டுப் பேரில் ரஞ்சன் சற்றுத் துடுக்கானவன். மற்ற மாணவர்களெல்லாம், 'பரீட்சையில் என்ன கேள்வி கேட்பார்களோ!' என்று கவலையோடு இருந்தார்கள். ரஞ்சன் மட்டும் கட்டிடத்தைச் சுற்றிச் சுற்றி நடந்துகொண்டிருந்தான். பரீட்சைக்குப் பிறகு வெளியே சென்ற மாணவர்களை வலுவில் போய், உள்ளே கேட்ட கேள்விகளைப் பற்றியெல்லாம் விசாரித்துக் கொண்டான். கேள்விகளில் சில கடினமாகவும், சில பள்ளிக்கூடப் படிப்புக்குச் சம்பந்தமில்லாமலும் இருந்ததை அவன் தெரிந்துகொண்டான். சாம்பு வாத்தியார் சற்று நையாண்டியாகவும் கேள்விகளைக் கேட்பதாகத் தெரியவந்தது.

இதற்குள் அந்த இரண்டு கோஷ்டிப் பையன்களும் உள்ளே போய் வந்தார்கள். கடைசிக் கோஷ்டியில் ரஞ்சன் இருந்தான். அவன் தன்னை நன்கு நிதானப்படுத்திக் கொண்டான்.

வழக்கப்படி சாம்பு இவர்களையும் பல கேள்விகள் கேட்டார். "தெற்கேயிருந்து வடக்கே 30 மைல் வேகத்தில் எலெக்டிரிக் ரெயில் போகிறது. அப்போது கிழக்கேயிருந்து மணிக்கு 15 மைல் வேகத்தில் காற்று அடிக்கிறது. ரெயிலின்

புகை மணிக்கு எவ்வளவு மைல் போகும்?" சிலர் விழித்தார்கள். சிலர் தவருக விடைகள் சொன்னர்கள். ரஞ்சன் மட்டும் மனசுக்குள் சிரித்துக் கொண்டான்.

"என்ன சிரிக்கிருய்? நீ தான் சொல்லேன், பார்க்கலாம்!" என்ருர் சாம்பு.

ரஞ்சன் நிமிர்ந்து, "எலெக்டிரிக் ரெயிலுக்குப் புகை ஏது?" என்று பளிச்சென்று பதில் கொடுத்தான்.

இவன் கடைசியாக நின்றுகொண்டிருந்தான். ஆகவே முதலில் ஐந்து பேர்களும் சரியாகப் பதில் சொல்லாத கேள்விக்கும் இவன் பதில் சொல்லும்படி நேரிட்டது.

சாம்பு திடீரென்று, "ஆமாம். வெங்காய சாம்பார் எப்படிச் செய்வது?" என்று மேலும் ஒரு கேள்வியைப் போட்டார். இந்தக்கேள்விக்கு ஒவ்வொருவரையும் பதில் சொல்லும்படி அவர் கேட்டார். முதல் நான்கு பேர்களும் சாம்பாரைப் பக்குவமாகத் தயாரிக்கும் வழிகளைத் தெரிவித்தார்கள். ஐந்தாவது பையன் சாம்பார் நன்ருக இருக்கிறதா என்று ருசி பார்க்கத்தான் தனக்குத் தெரியும் என்ருன். இது கேட்டுச் சாம்புவும் மற்றவர்களும் 'களுக்'கென்று சிரித்தார்கள்.

"இந்தக் கோஷ்டியிலுள்ளவர்களுக்கு வெங்காய சாம்பார் தயாரிக்கத் தெரிகிறது. ஒருவனுக்கு ருசி பார்த்துச் சாப்பிடத் தெரியும். ஆகவே இந்த ஐந்து பேரும் சேர்ந்து சமையல் வேலையை நன்கு செய்ய முடியுமென்று தோன்றுகிறது" என்று கேலி பண்ணினர் சாம்பு. பிறகு, "அப்பா! கடைசிப் பேர் வழி! உனக்குத் தெரியுமா சாம்பார் செய்ய?" என்று ஏளனமாகக் கேட்டார்.

ரஞ்சன் மனத்தில் எழுந்த அவமானம் பீரிட்டு வெளிவந்தது. "ஸார்! நாங்கள் பள்ளிக்கூடம் சேர்ந்து படிக்க வந்தவர்கள். நீங்கள் ஓட்டலுக்கா பையன்களைப் பொறுக்குகிறீர்கள்?

இந்த மாதிரி பரீட்சை வைத்து நீங்கள் பையன்களைத் தேர்ந் தெடுத்தால் இது விரைவில் ஓட்டலாகவே மாறிவிடும்" என்று மிகத் துடுக்காகப் பதில் சொல்லிவிட்டான். பரீட்சை அதிகாரிகள் அசந்துபோய்விட்டார்கள். சாப்பு முகத்திலோ ஈ ஆடவில்லை. மறுபேச்சில்லாமல் அந்தக் கோஷ்டியைச் சேர்க்கச் சிபார்சு செய்தார். தம்மையும் மிஞ்சி ஒரு சிஷ்யன் வற்பட்டுவிட்டானே என்று வியந்து போனார்.

மற்ற மாணவர்களின் காதுக்கு இது எட்டியது. பிறகு கேட்கவேண்டுமா? இதுவரை சாதாரணச் சாம்புவாக இருந்தவர் இப்போது சாம்பார் சாம்பு ஆகிவிட்டார்.

வீட்டுக் கணக்கு

சுந்தரம் மெல்ல அடிமேல் அடிவைத்து நடந்து வந்த போதே அவன் மாமாவுக்கு யோசனையாக இருந்தது. "என்னடா சமாசாரம்?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை மாமா! ஒரு விளையாட்டு! நம்ப ரெண்டு பேருமா விளையாடலாமா?" என்றான் சுந்தரம்

மாமா, "என்ன விளையாட்டுடா அப்படி?" என்றார்.

"நீதான் கடைக்கார முதலாளியாம். நான் சாமான் வாங்குகிறவனும்!"

"சரி; அப்படியே இருக்கட்டும்."

"நான் இப்போ சாமான் வாங்க வந்திருக்கேன். ஓய்! கடைக்காரரே சிவப்புக் கலர் பென்சில் என்ன விலை?"

"இரண்டரை அணா!"

"ரொம்பக் கிராக்கியாய் இருக்கிறதே. ஓரணா எட்டுத் தம்படிதான்! சம்மதமா?"

"இதென்ன கணக்குடா ஒரணாவும் எட்டுத் தம்படியும்!"

"அது என்ன கணக்கோ! சம்மதமா, இல்லையா?"

"சரி; உனக்கு எவ்வளவு வேணும்?"

"ஒரு குரோஸும் இரண்டேகால் டஜனும் வேணும்?"

"ஒன்றரை குரோஸாகத்தான் வாங்கிக்கோயேன். கணக்காக இருக்கும்."

"எனக்கு வேண்டியது அவ்வளவுதான். அதுக்குள்ள விலையைச் சொல்லு!"

மாமா மனசுக்குள்ளாகவே ஒரு விதமாகத் தம்பிடியைப் பெருக்கி, அணாவைப் பெருக்கி விடையைக் கண்டு பிடித்தார். "அடேய், ரூ. 17-13-0 எடு!" என்றார்.

"சரி; போய்க் கொண்டுவரேன்!" என்று சொல்லிவிட்டுச் சுந்தரம் நழுவினான். பிறகு திரும்பவேயில்லை.

மாமா நெடுநேரம் பார்த்துவிட்டு உள்ளேபோய்ப் பார்த்தார். சுந்தரம் கணக்கை எழுதிக்கொண் டிருந்தான்.

"என்னடா?" என்று கேட்டார் மாமா!

"ரொம்ப தாங்க்ஸ் மாமா! அதுதான் எனக்கு இன்னிக்கு வீட்டுக் கணக்கு!" என்றான் சுந்தரம். —கிச்சு

கூரைமேல் ஆடு

– 'சோமசன்மா'

ஒரு காட்டில் ஓநாய் ஒன்று இருந்தது. அது ஒரு நாள் ஏதோ சொந்த வேலையாய் அடுத்த காட்டுக்குப் போகவேண்டியிருந்தது. ஓநாய் என்றால் அதற்கும் பெண்டாட்டி பிள்ளைகள் எல்லாம் உண்டல்லவா? கல்யாணம் கார்த்திகை, கொடுக்கல் வாங்கல் எல்லாம் இருக்கும் அல்லவா? அதனால் அடுத்த காட்டுக்கு அந்த ஓநாய் போயிற்று.

திரும்பி வரும்பொழுது நன்றாய் இருட்டிவிட்டது. புறப்படும்போதே அதனுடைய பெண்டாட்டி சொல்லிற்று: "அஸ்தமிக்கிறதுக்குள்ளே வீட்டுக்கு வந்துவிடுங்கள். ஏனென்றால் உங்களுக்கு வழி தப்பிப் போய்விடும்!" அதற்கு வெள்ளை எழுத்து உண்டு. ஆதலால் இருட்டினால் அவ்வளவு நன்றாகக் கண் தெரியாது. அதனால்தான் பெண்டாட்டி அப்படிச் சொல்லிற்று.

போன இடத்தில் ஓநாய் தன் சிநேகிதனுடன் பேசிக்கொண்டு வெகுநேரம் உட்கார்ந்துவிட்டது. திரும்பி வரும்போது இருட்டி விட்டது. அதற்குத்தான் வெள்ளை எழுத்தாயிற்றே! அதனால் வழிதப்பிப் போய் ஒரு கிராமத்துக்குள் நுழைந்து விட்டது.

நுழைந்ததும் அங்கே ஒரு குடியானவன் வீட்டுத் தோட்டத்தில் போய் நின்றது. அந்தத் தோட்டத்தில் ஒரு குடிசை இருந்தது. அந்தக் குடிசையின் கூரைமேலிருந்து கணீரென்று ஒரு குரல் கேட்டது:

"டேய்! யாரடா அவன் அயோக்கியப்பயல்! தோட்டத்துக் குள்ளே நுழைந்தது?"

ஓநாய் திடுக்கிட்டுப்போய் நாலுபக்கத்திலும் திரும்பிப் பார்த்தது. இவ்வளவு தைரியமாய்த் தன்னை யார் இப்படிக் கூப்பிட்டது என்று புரியவில்லை. அப்போது மறுபடியும் அந்தக் குரல் கேட்டது:

"டேய்! ஓநாய்ப்பயலே! என்ன முழிக்கிறாய்! இங்கே பார் கூரைமேலே! நான்தான் ஆட்டுக்குட்டி; தெரியவில்லை?"

அப்போதுதான் ஓநாய்க்குப் புரிந்தது. கூரைமேல் ஏறிக் கொண்டு ஆட்டுக்குட்டிதான் அப்படி அதட்டிப் பேசியது! ஏனென்றால் ஓநாய் கூரைமேல் ஏறி வரமுடியாது அல்லவா? அதனால்தான் அவ்வளவு துணிச்சல்!

ஆட்டுக்குட்டி மேலும் சொல்லிற்று: "ஏய்! அயோக்கியப் பயலே! காலிப்பயலே! இங்கே எதற்காக வந்தாய்? உன்னிடம் எனக்குப் பயமே கிடையாது! மரியாதையோடு திரும்பிப்போய் விடு! இல்லையானால் உன் மூக்கை உடைத்துவிடுவேன்."

அப்போது ஓநாய், "எதற்காக அப்பா என்னை அநாவசியமாய்த் திட்டுகிறாய்?" என்று கேட்டது.

"அநாவசியமா! நீ என்னுடைய அண்ணனை ஆற்றுக்கு நீர்குடிக்க வரும்போது வம்புக்கு இழுத்துக் கொல்லவில்லை? உன்னை என்ன செய்கிறேன் பார்! போக்கிரி ஓநாயே!" என்று திட்டிற்று ஆட்டுக்குட்டி.

ஓநாய்க்குக் கோபம் வந்தது. இருந்தாலும் ஆட்டுக்குட்டி கூரைமேல் அல்லவா இருக்கிறது? அதை என்ன பண்ண முடியும்? அதனால் வாயைத் திறக்காமல் அங்கிருந்து திரும்பி வீட்டை நோக்கி ஓடிற்று.

அது ஓடிக்கொண் டிருக்கும் போதே ஆட்டுக்குட்டி இன்னும் விடாமல், "சீ சீ! பயந்தாங் கொள்ளி! பிசாசு! சனி! மூதேவி! ஓடு! ஓடு!" என்று கத்திக்கொண்டே யிருந்தது.

இப்படி இருக்கையில் ஒரு நாள் நம்முடைய ஆட்டுக்குட்டி அநேகப் பெரிய ஆடுகளுடன் கூட மேயப்போயிற்று. ஆடுகள் எல் லாம் மேய்ந்துகொண்டே ரொம்ப தூரம் போய்விட்டன.

நம்முடைய ஆட்டுக் குட்டியும் அதனுடன்கூடப் படிக்கும் இன்னும் நாலைந்து ஆட்டுக்குட்டிகளுமாகச் சேர்ந்து விளையாடிக்கொண் டிருந்தன. என்ன விளை யாட்டு என்றால் 'ரேஸ்' விளை யாட்டு. அதாவது, அரை மைல் தூரம் ஓடிப் போய் விட்டுத் திரும்பி வரவேண்டி யது. அதில் யார் முந்தி வரு கிறார்களோ அவர்களுக்கு ஒரு 'காரம் போர்டு' இனாம்!

இப்படியாக நாலைந்து ஆட்டுக்குட்டிகள் ஓடின. நம் முடைய ஆட்டுக்குட்டி என்ன செய்தது? எல்லாருக் கும் முந்தி வந்துவிடவேண் டும் என்பதற்காக வெகு வேகமாகக் கண்ணை மூடிக்கொண்டு ஓடியது. அதனு ரொம்ப தூரம் போய்விட்டது.

போனதும் சட்டென்று நின்று திரும்பிப் பார்த்தது. கூட வந்த சிநேகிதக் குட்டிகள் ஒன்றையும் காணவில்லை. அதனு திரும்பிப் போய்விடலாம் என்றால் வழி தெரியவில்லை. இ ஒற்றையடிப்பாதை வழியாக வந்துகொண் டிருந்தது.

அது வந்த இடம் நடுக்காடு. எங்கே பார்த்தாலும் ஓ மரங்களும், முள் நிறைந்த புதர்களுமாய் இருந்தன. அதற் என்ன செய்வது என்று தெரியவில்லை. மனசுக்குள் ஒரே ப மாய் இருந்தது. தன்னந் தனியாய்க் காட்டுக்குள் வந்து அ பட்டுக்கொண்டால் யாருக்குத்தான் பயமாயிருக்காது? அதனு ஆட்டுக்குட்டி பயந்துகொண்டு, "மே! மே!" என்று கத்திற்று

அது போய் நின்ற இடத்துக்குப் பக்கத்தில்தான் ஓநாயி வீடு இருந்தது. அப்போதுதான் ஓநாய் சாப்பிட்டுவிட்டுத் தெ வில் வந்து உட்கார்ந்து வெற்றிலை பாக்குப் போட்டுக்கொ டிருந்தது. அதன் காதில் ஆடு கத்தும் குரல் கேட்டது. உடனே அது தன் பெண்டாட்டியைக் கூப்பிட்டு, "அடியே! அங்கே யாரோ ஒரு ஆட்டுக்குட்டி வந்து கத்துகிறது, பார்" என்றது.

பெண்டாட்டி வெளியில் வந்து பார்த்துவிட்டு ஆட்டு குட்டியை அழைத்துவந்தது. அந்த ஆட்டுக்குட்டியி

..லக் கேட்டதும் ஓநாய்க்கு அடையாளம் தெரிந்துவிட்டது. ..னே அதற்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது.

"டேய்! அயோக்கியப்பயலே! நீதானேடா கூரைமேல் ..கார்ந்துகொண்டு என்னைத் திட்டினுய்? இப்போது உன்னை ..ழுங்கி ஏப்பம் விடப்போகிறேன். என்ன செய்யப்போகிருய், ..ர்ப்போம்!" என்றது ஓநாய்.

ஆட்டுக்குட்டி பயந்து நடுங்கிற்று. "மாமா! மாமா! தெரி ..த்தனமாய் உங்களைத் திட்டிவிட்டேன், மாமா! என்னை ..ன்னித்துவிடுங்கள் மாமா!" என்று கெஞ்சிற்று.

ஓநாய், "அதெல்லாம் முடியாது. உன்னை விடமாட்டேன். ..டியே! இவனைக் கொண்டுபோய்ச் சட்டினியாக அரைத்து ..வ. இன்னிக்கு இவனைத்தான் சாப்பிடப்போகிறேன்!" ..ன்றது.

ஆட்டுக்குட்டிக்கு உடம்பெல்லாம் பயத்தினுல் நடுங்கிற்று. ..ன்றும் சொல்ல முடியாமல், "பெப்பெப்பே!" என்று உளறிக் ..ண்டே நின்றது.

அப்போது ஓநாயின் பெண்டாட்டி வந்து தன் புருஷனைப் ..த்துச் சொல்லும்: "நீங்கள் இவனை விழுங்குவதைப்பற்றித் ..டையில்லை. அவனுடைய போக்கிரித்தனத்துக்கு அவனை ..ப்படித்தான் சட்டினியாக அரைக்கவேண்டும். ஆனுல் உங்க ..டைய உடம்பைப்பற்றிக் கவலைப்படுகிறேன். உங்களைத்தான் ..க்டர் மாமிசம் சாப்பிடக்கூடாது என்று சொல்லியிருக்கி ..ரே! சாப்பிட்டால் மறுபடியும் உங்களுக்கு வயிற்றுவலி ..துவிடுமே என்றுதான் பயப்படுகிறேன்."

அதைக் கேட்ட ஓநாய், "நீ சொல்வதும் வாஸ்தவந்தான்! ..னல் இவனைக் கட்டிப்போட்டு வை. நாளைக்குக் காலையில் ..முடைய அண்ணு வீட்டுக்கு அனுப்பிவிடுவோம்" என்றது.

ஆனுல் பெண்டாட்டி ஓநாய், "சரி" என்று சொல்லிவிட்டு, ..த ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கண்ணைக் காட்டி, ..டிப் போ!" என்று ஜாடை செய்தது. ஆட்டுக்குட்டியும், ..ழைத்தோம்!" என்று ஓடிவிட்டது.

ஓநாய்க்கு வெள்ளை எழுத்தானபடியால் தன் பெண்டாட்டி ..ண்ணைக் காட்டியதோ, ஆட்டுக்குட்டி ஓடிப்போனதோ ..ன்றும் தெரியாது.

ஆகையால் பிள்ளைகளே, சாதுவாயிருந்தாலும் இருக்கிற ..டத்தில் இருந்தால் தைரியமாய் இருக்கலாம் என்பதும்; ..ண் ஓநாயைவிடப் பெண் ஓநாய்க்கு இரக்கம் ஜாஸ்தி என்ப ..ம் இதனுல் தெரிகிறது அல்லவா?

குட்டிக் கதைகள்

ராமசர்மா

உலகம்

"இந்த உலகம் ஒரே ஈரமாயிருக்கிறது. அதில் சந்தேகம் இல்லை" என்றது தவளை.

"இல்லவே இல்லை; உலகம் முழுவதும் ஒரே சிலந்திக்கூடாக நிறைந்திருக்கிறது" என்றது ஈ.

"உலகம் ஓர் இருண்ட காட்டைப் போல்தான் இருக்கிறது; இடையிடையே சிறு ஜன்னல்கள் தெரிகின்றன" என்றது புழு.

"அப்பனே, நீ சொல்வது தவறு; உலகம் பச்சைமயமாய் இருக்கிறது" என்றது தலையை ஆட்டிக்கொண்டிருந்த மல்லிகைச் செடி.

"நான் சொல்வதைக் கேளுங்கள்" என்று பாடிற்று வானம்பாடி: "உலகம் ஈரமாயிருக்கிறது; உலர்ந்தும் இருக்கிறது; பசுமையாய் இருக்கிறது; இருண்டும் இருக்கிறது. ஆனால் அவ்வளவுதான் உலகம் என்று நினைத்தால் அது தவறு; உலகம், மேலே நீலக் கூரையால் வளைந்து, இடையே இனிய பாடல்களால் நிறைந்திருக்கிறது!"

—இங்கிலாந்துக் கதை.

ஆடுகளும் நெல்வயலும்

முன் ஒரு காலத்தில் ஓர் ஊரில் ஒரு பையன் இருந்தான். அவன் தினம் ஆட்டுக் குட்டிகளை ஓட்டிக்கொண்டு புல் தரையில் போய் மேய்த்து வருவது வழக்கம்.

ஒரு நாள் அவன் ஆட்டுக்குட்டிகளை ஓட்டிக்கொண்டு போகையில் ஓர் ஆடு வேலியைத் தாண்டிப் பக்கத்தில் இருந்த நெல் வயலுக்குள் நுழைந்துவிட்டது. ஒன்று நுழைந்ததும் மற்ற ஆடுகளும் கூடவே நுழைந்துவிட்டன. பையன் அந்த ஆடுகளை வெளியில் வரும்படி கூப்பிட்டான். அவை, "வர முடியாது" என்று தலையை ஆட்டிக்கொண்டே நடு வயலுக்குள்ளே ஓடின. பையன் உடனே வேலியைத் தாண்டி அவைகளைத் துரத்திக்கொண்டு ஓடினான். அவனால்

அவைகளைப் பிடிக்க முடியவில்லை. ஓடி ஓடிக் களைத்துப்போய் வேலிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து ஓவென்று அழுதான்.

அப்போது அந்தப் பக்கம் வந்த ஒரு நாய் பையன் அழுவதைப் பார்த்து, "அப்பா, ஏன் அழுகிறாய்?" என்று கேட்டது. பையன் நடந்ததைச் சொன்னான். அதைக் கேட்ட நாய், "நான் இதோ அந்தப் பொல்லாத ஆடுகளைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லி வயலுக்குள் குதித்தது. 'ளொள், ளொள்' என்று குரைத்துக்கொண்டே ஓடிற்று. ஆனால் அந்த ஆடுகளை நாயினாலும் பிடிக்க முடியவில்லை. ஆகவே நாய் களைத்துப் போய் வேலிக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு அழுதது.

அப்போது அங்கு வந்த ஒரு நரி நாயைப் பார்த்து, "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டது. நாய், "பையன் அழுகிறான் அதனால் நானும் அழுகிறேன்" என்றது. நரி பையனைக் கேட்க, அவன் காரணத்தைச் சொன்னான். உடனே நரி, "அப்படியா சேதி! அந்த ஆட்டுக்குட்டிகளை நொடியில் பிடித்து வருகிறேன்" என்று வயலுக்குள் புகுந்தது. சற்று நேரத்தில் அதுவும் களைத்துப் போய் வேலிக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு அழுதது.

அப்போது அங்கே வந்த ஒரு குளவி நரியைப் பார்த்து, "ஏன் அழுகிறாய்?" என்று கேட்க, நரி நாயைக் காட்டிற்று. நாய் பையனைக் காட்டிற்று. பையன் காரணத்தைச் சொன்னான். உடனே அந்தக் குளவி, 'உஸ்ஸ்' என்று ரீங்காரம் செய்து கொண்டு வயலுக்குள் புகுந்தது.

குளவி வருவதைக் கண்ட ஆடுகள் ஓடின. ஆனால் குளவி வேகமாகப் பறந்து போய் ஓர் ஆட்டின் காதில் உட்கார்ந்து, 'உஸ்!' என்று கொட்டிற்று. உடனே அந்த ஆடு மற்ற ஆடுகளைப் பார்த்து, 'தம்பிகளா! இனிமேல் நாம் திரும்பிப் போய்விடுவோம். எவனோ ஒருவன் வந்து நம்மைக் கடிக்கிறான்"

என்றது. உடனே எல்லா ஆடுகளும் திரும்பி வயலைவிட்டு வெளியில் ஓடி வந்தன.

அதைக் கண்டதும் நாய், "இந்தக் குளவி இவ்வளவு சிறிதாக இருந்தாலும் நம்மால் செய்ய முடியாததைச் செய்துவிட்டது!" என்றது. அதற்கு நரி, "நம்மைப் போல் அது உரக்கச் சத்தம் போடுவதில்லை. காரியத்தில் கெட்டி" என்றது.

—அமெரிக்கக் கதை.

நட்சத்திரப் பவுன்கள்

ஓர் ஊரில் அநாதையான ஒரு பெண் இருந்தாள். அவளுக்குத் தாய் தகப்பனுர் யாரும் இல்லை. வீடுவாசல் ஒன்றும் இல்லை. ஒரே ஒரு ரொட்டித் துண்டு மட்டும் இருந்தது. அதனுல் அவள் ஒரு துணியைப் போர்த்திக்கொண்டு ரொட்டித் துண்டுடன் தெருவில் நடந்து போனுள்.

அப்போது அவளுக்கு எதிரில் ஒரு கிழவன் வந்தான். அவன் ஒட்டிப்போய்த் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்தான். அவன் அவளுடைய கையில் இருந்த ரொட்டித் துண்டைப் பார்த்ததும், "அம்மா! பசி கண்ணை இருட்டுகிறது. ஏதாவது ஆகாரம் இருந்தால் கொடு. புண்ணியம் உண்டு" என்று கேட்டான். உடனே அந்த ரொட்டித் துண்டை அவனிடம் கொடுத்துவிட்டுப் போனுள் அந்தப் பெண்.

சற்றுத் தூரம் போனதும் வழியில் ஒரு குழந்தை உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். அது குளிரால் நடுங்கிக்கொண் டிருந்தது. அவளைப் பார்த்ததும், "அம்மா, குளிர் நடுக்குகிறது. உன்னுடைய துணியைக் கொடுக்கமாட்டாயா?" என்று கேட்டது. உடனே அநாதைப் பெண் மேலே போர்த்துக்கொண்டிருந்த துணியை எடுத்துக் குழந்தையின்மேல் போர்த்துவிட்டுச் சென்ருள்.

அவள் இன்னும் கொஞ்சதூரம் போனதும் இன்னெரு குழந்தையைக் கண்டாள். அந்தக் குழந்தை உடம்பெல்லாம் தெரியும்படியாக ஒரு கந்தல் பாவாடையைக் கட்டிக்கொண்டிருந்தது. அவளைக் கண்டதும், 'அம்மா! நீ போட்டிருக்கும் சட்டையைக் கொடுக்கமாட்டாயா? என்னுல் குளிரில் நடக்கவே முடியவில்லை" என்று கேட்டது. உடனே அநாதைப் பெண்

தன்னுடைய சட்டையைக் கழற்றி அதனிடம் கொடுத்துவிட்டுப் போய்விட்டாள்.

இவ்விதம் அவள் தன்னிடம் இருந்த எல்லாவற்றையும் பிறருக்குக் கொடுத்துவிட்டு ஒரு காட்டின் நடுவில் போய் நின்றாள். அப்போது ஆகாயத்திலிருந்து பளபளவென்று ஒரு கொத்து நட்சத்திரங்கள் அவளுடைய காலடியில் உதிர்ந்தன. அநாதைப் பெண் உற்றுப் பார்த்தாள். அவ்வளவும் பளபளப்பான தங்கப் பவுன்கள்! அவைகளுக்கு மத்தியிலே ஒரு பட்டுச் சட்டை தகதகவென்று மின்னிற்று. அதை எடுத்து அவள் அணிந்துகொண்டாள்; தங்கப் பவுன்களை அள்ளிக்கொண்டாள். அதன் பிறகு அவள் ஆயுள் முழுவதும் செல்வ போகத்தில் வாழ்ந்தாள்.

—ஜெர்மன் கதை.

பிச்சைக்காரன்!

ஓர் ஊரில் ஒரு பிச்சைக்காரன் இருந்தான். அவன் நொண்டி. அவன் ஒரு நாய் வளர்த்துவந்தான். அது அவனுக்குப் பலவிதத்திலும் உதவி செய்துவந்தது.

அவன் ஒரு சிறு மூங்கில் பிடிலை எடுத்து மாலை வேளைகளில் பிடில் வாசிப்பான். பாட்டைக்கேட்க வரும் ஜனங்களிடம் நாய் தட்டு ஒன்றை வாயில் கவ்விக்கொண்டு பிச்சை கேட்கும். நாயின் அறிவையும் பிச்சைக்காரனின் பாட்டையும் மெச்சி ஜனங்கள் காசு தருவார்கள்.

ஒரு நாள் பிச்சைக்காரன் பாட்டைக்கேட்க ஒருவருமே வரவில்லை. பழைய பாட்டுத்தானே என்று வராமல் இருந்துவிட்டார்கள். அவன் மிகவும் வருத்தத்தோடு உட்கார்ந்திருந்தான். அந்தச் சமயம் அந்த வழியே ஒரு கனவான் சென்றார். அந்தப் பிச்சைக்காரனைப் பார்த்தார். அவன் கையில் இருந்த பிடிலைத் தாமே வாங்கிக்கொண்டு வாசிக்கத் தொடங்கினார். உடனே அந்த வழியில் போவோர் வருவோர் எல்லாரும் அங்கே கூடவாரம்பித்தார்கள். சற்று நேரத்தில் தட்டு நிறையக் காசு சேர்ந்துவிட்டது.

ஒரு மணி நேரத்துக்குப்பின் அவர் பிடில் வாசிப்பதை நிறுத்தினார். "நானும் ஒரு சங்கீத வித்வான்தான். என் பாட்டைக் கேட்பதற்காக இவர்கள் கூடவில்லை. நான் எப்பொழுது பிச்சைக்காரன் ஆனேன் என்று பார்க்கத்தான் கூடினார்கள்" என்று சொல்லிவிட்டுப் போனார் அவர்.

இரு துருவங்கள்

நா. ஜகந்நாதன்

பாலுவின் தாயாருக்கு அன்று உடம்பு சரியாக இல்லை. தலைவலியும் ஜுரமும் ஒன்று சேர்ந்து மிகவும் கஷ்டப் படுத்தின. வலி பொறுக்க முடியாமல், "தலையை வலிக்கிறது; கொஞ்சம் நெற்றியைப் பிடித்து விடேன்" என்று பாலுவை அவன் தாய் கேட்டுக்கொண்டாள். பாலு உடனே மறுத்து விட்டான். எங்கே தாயின் நோய் தனக்கு ஒட்டிக்கொள்ளுமோ என்ற பயத்தினால், அவன் தன் தாயைத் தொடவும் அஞ்சினான். சாதாரண ஜுரந்தான்; என்றாலும் பாலு தலையைப் பிடித்துவிட விரும்பவில்லை.

பாலுவின் தம்பி சுந்தரம் மட்டும் ஊரில் இருந்தால் அவன் தாய் சொல்வதற்கு முன்னாடியே வந்து உட்கார்ந்து, தலையைப் பிடித்து விடுவான். அவன் தொட்டு அமுக்கிவிட்டாலே போதும்; தலைவலி எல்லாம் தன்னாலே பறந்துவிடாதா? சுந்தரம் தன் பாட்டியைப் பார்ப்பதற்காகக் கிராமத்துக்குச் சென்றிருந்தான். வீட்டில் அவர்களுடைய மூத்த சகோதரி சமையல் வேலையைச் செய்யவேண்டியிருந்தது. அவளால் வந்து தாயைக் கவனிக்க முடியவில்லை.

சுந்தரம் மிகவும் நல்லவன். யாருக்கு உடம்புக்கு வந்தா

கோவிந்தன்: அடே! ரொம்ப வேகமாக நடக்கிருயே, நீ?
சந்தானம்: பூ! இதென்ன பிரமாத வேகம்! நான் தன்னந் தனியாக நடக்கிறபோது நீ கூட ...ந்து பார்க்கணும்!

...ும் முனகாமல் உதவி செய்வான். வேளைக்கு மருந்து எடுத்துக் கொடுப்பான்; கஞ்சியோ, ஹார்லிக்ஸோ தருவான்; தலையைப் பிடித்துவிடுவான்; கைகால்களை அமுக்கிவிடுவான்-இப்படிச் சகல வேலைகளையும் செய்வான். பிறருக்கு உழைப்பதற்கே அவனுக்குப் பொழுது சரியாக இருக்கும். எவ்வளவு வேலை செய்யச் சொன்னாலும் அலுக்காமல் செய்வான்.

பாலுவோ, சுந்தரத்துக்கு நேர்மாருன குணம் உடையவன். இருவரும் இரு துருவங்கள் என்று சொல்லலாம். எந்த வேலை செய்யச் சொன்னாலும் பாலு செய்யமாட்டான். தன்னுடைய வேலைகளைக்கூடச் செய்யப் பிறரது உதவியை எதிர்பார்ப்பான். அவன் குளிப்பதற்கு யாராவது தண்ணீர் பிடித்து வைக்கவேண்டும்; அவன் சட்டைகளை யாராவது துவைத்துக் கொடுத்தால்தான் உண்டு. இல்லாவிட்டால் அழுக்குச் சட்டைகளையே அணிந்து கொண்டிருப்பான். அப்படியிருந்தும் பிறரைத் தொடவோ, நோய் நொடியின்போது உதவி செய்யவோ மாட்டான்; பயப்படுவான்.

கடிதம் போட்டுச் சுந்தரம் வந்து சேர்ந்தான். தன் தாய்க்குச் சகல உதவிகளையும் செய்தான். தாய் வாந்தி எடுத்தால் அதைப் பாத்திரத்தில் பிடித்து அதைத் தெருவில் கொண்டுபோய்க் கொட்டி, பாத்திரத்தைக் கழுவி, தாயின் வாயையும் துடைத்துவிடுவான். பாலுவோ, வாந்தி எடுத்தால் நாற்றம் எடுக்கும் என்று அடுத்த வீட்டுக்குச் சென்று அரட்டையடித்துவிட்டு, எல்லாம் கழுவியான பிறகு வந்து சேருவான். சுந்தரம் தாயின் படுக்கையை எல்லாம் எடுத்துச் சோப்புப் போட்டுக் கழுவிச் சுத்தப்படுத்தி, உலர்த்தி வைத்தான். பாலு வழக்கம் போல் வெளியே போய்விட்டான். சுந்தரம் தன்னைத் தொட்டால்கூடக் கோபித்துக்கொள்வான் பாலு!

சுந்தரத்தைத் தவிர உதவி செய்வார் யாருமில்லை. அவனுடைய சகோதரிக்குச் சமையலறையிலேயே வேலை நிறைய இருந்தது. தகப்பனுரோ நூற்றைம்பது ரூபாய்ச் சம்பளத்துக்காகத் தம்மையே ஆபீசுக்கு

அர்ப்பணம் செய்திருந்தார். பாலுவின் விஷயந்தான் ஜகப் பிரசித்தமாயிற்றே! ஆகவே சுந் தரம்தான் உதவி செய்ய வேண்டியிருந்தது.

சுந்தரம் செய்த சுசுரூஷை களினால், அவன் தாய் ஜுரத்தினின்று விடுபட்டு எழுந்தாள். தன் இரு பிள்ளை களில் ஒருவன் சுயநலமற்றவ னாகவும், ஒருவன் சுயநலம் உள் ளவனாகவும் இருப்பது அவ ளுக்கு விளங்கவில்லை. சுந்தரம் செய்த சுசுரூஷைகளை உயிர் உள்ள அளவும் அவளால் மறக்க முடியாது. அவனைக் கண்ணி னும் இனிய பொருளாகக் கரு திக் காப்பாற்றி வந்தாள்.

சில வாரங்கள் சென்றன. பாலு, தன் தம்பி சுந்தரத்துக் குக் கடுமையான ஜுரம் வரு மென்று எதிர்பார்த்தான். ஏனெனில், அவன் தாய்க்குச் செய்த உதவியால் அவளுடைய ஜுரம் அவனுக்கு வருமென்று அவன் எண்ணினான். சுந்தரத் துக்கு நோய் வராதது ஆச் சரியமாகத்தான் இருந்தது. அதைவிட ஆச்சரியம் என்ன வென்றால், பாலுவுக்கே கடுமையான ஜுரம் வந்தது தான்!

வழக்கம்போல் சுந்தரந்தான் பாலுவுக்கும் சுசுரூஷை செய் தான் என்று சொல்லத் தேவை யில்லை. பத்துப் பதினைந்து நாட் கள் ஜுரத்தில் மிகவும் கஷ் டப்பட்டு, பாலு துரும்பாக இளைத்துவிட்டான். பிறகு சிறிது சிறிதாக இழந்த சக்தி யைப் பெற ஆரம்பித்தான். இப்போதும் சுந்தரம்தான் பாலுவுக்கு மருந்து கொடுத்தல், உணவு தருதல் முதலானவை களைக் கவனித்துக்கொண் டிருந்தான். பாலுவுக்கு அது ஆச்சரியமாக இருந்தது. சுந் தரம் தன்னைப்போல் ஒதுங்கிப் போய் இருந்தால் என்ன ஆவது என்று எண்ணும்போதே அவ னுக்கு நடுக்கமாக இருந்தது.

பாலு தனியாக இருந்த போது சிந்தித்துப் பார்த்தான்: "பிறரது நோய் நொடிகளைப் போக்குவதிலேயே தன் உட லைக் கெடுத்துக்கொள்ளும் சுந்த ரத்துக்கு ஜுரம் வராமல், எனக்கு ஜுரம் வரக் காரணம் என்ன? நான் நோயாளியின் அருகில்கூடப் போனதில் லையே! எனக்கு ஏன் கடுமை யான ஜுரம் வந்தது? நாள் முழுவதும் நோயாளியின் அருகிலேயே இருக்கும் சுந்த

ரத்துக்கு என் ஜுரமே வருவதில்லை......?''

அவனுக்குப் பதில் விளங்க வெகு நேரமாகவில்லை.

சுந்தரம் சுயநலமில்லாமல், பிறருக்கு உழைப்பதிலேயே இன்பம் கண்டான்.

பாலுவோ சுயநலத்துடன் வாழ்ந்தான். அதுவுமல்லாமல் எங்கே தனக்கு நோய் ஒட்டிக்கொள்ளுமோ என்று வீணுகப் பயந்து பயந்து, தானுகவே நோயை வருவித்துக்கொண்டான். சுந்தரமோ தான் நோயாளியுடன் பழகுவதால் தனக்கு நோய் ஒட்டிக்கொள்ளும் என்று நினைத்ததே இல்லை. ஆகவே அவனுக்கு நோய் வருவதில்லை.

பாலு எப்போதும் அழுக்கு உடையுடன்தான் காட்சியளிப்பான். நாளுக்கு ஒரு முறை கூடக் குளிக்கமாட்டான். ஆகவேதான் அவனுக்கு நோய் வந்தது என்றும் கூறலாம்.

சுந்தரமோ நோயாளியிடம் போகவேண்டியிருந்தது. அதனுல் இன்னும் சுத்தமாக இருந்தான். நாள்தோறும் ஒரு முறையாவது நன்கு தேய்த்துக் குளித்துவிட்டுத்தான் அவன் எப்போதுமே சாப்பிடுவான். ஆகவே அவனை நோய் நொடிகளும் அணுக அஞ்சின.

பாலுவுக்கு விஷயம் விளங்கியதும் அவன் கண்களிலிருந்து முத்துப்போல் நீர் வடிய ஆரம்பித்தது.

''ஏன் அண்ணு, அழுகிறுய்?'' என்று பரிவுடன் வந்து கேட்டான் சுந்தரம்.

''தம்பீ! நீதான் உயர்ந்தவன். நான் சுயநலம் பிடித்து ஒதுங்கியிருந்தும் என்னை நோய் பிடித்துக்கொண்டது. நீ நோயாளிகளிடம் பழகியும் உனக்கு நோய் வரவில்லை. காரணம் நீ சுயநலமில்லாமல், தூய மனத்துடன் மற்றவர்களுக்காக உழைத்தாய்! நீதான் நல்லவன். என்னை மன்னிக்கவேண்டும். 'என்னைத் தீண்டாதே' என்று கூட உன்னை முன்பு எத்தனையோ முறை கண்டித்திருக்கிறேன். அதன் பலனை இன்று அநுபவிக்கிறேன். என்னை, 'மன்னித்தேன்' என்று சொன்னுல்தான் உன் காலை விடுவேன்'' என்று சொல்லி அவன் கால்களைப் பிடித்துக்கொண்டான் பாலு.

''இருக்கட்டும் அண்ணு! எழுந்திரு! இதெல்லாம் என்ன? எப்படியோ உன் மனம் மாறிவிட்டது. எழுந்திரு!'' என்றுன் சுந்தரம், அன்பு கனிய.

அதே போலத் தன் தாயின் கால்களில் விழுந்து, செய்த தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டான் பாலு.

இப்போதெல்லாம் யாருக்காவது நோய் வந்துவிட்டால் பாலுவும் சுந்தரமும் மாற்றி மாற்றிச் சுசுரூஷை செய்வதைப் பார்க்கலாம்.

அந்த இரு துருவங்களும் இப்போது இணைந்திருந்தன!

பாதாள பைரவன்

'சுகுமாரன்'

பம்பா நதிக்கரை யோரமாகத்தான் நம் கதை ஆரம்பமாகிறது. அது அழகான பிரதேசம். பம்பாநதி சமுத்திரத்தில் சங்கமமாகும் இடம். நதியின் படுகையில் அழகான பெரிய தோட்டம். மணலிலே கடற்கன்னிகளுடன் ஜயந்திகா விளையாடிக்கொண் டிருந்தாள். கடற்கன்னிப் பெண்களின் உடம்பு பாதிக்கு மேல் சொர்ணமயமான மீன்களைப் போலவும் இடுப்புக்கு மேல் மனித உருவத்திலும் இருந்தது. அழகாகவும் இனிமையாகவும் பேசினார்கள். ஜயந்திகா அவர்களுக்கு அன்புப் பரிசாக ஏதாவது கொடுக்க விரும்பினாள். எதிரே தோட்டத்தில் அழகான புஷ்பங்களெல்லாம் பூத்துக் குலுங்கின. அந்தப் புஷ்பங்களை எடுத்து மாலையாகத் தொடுத்து அவர்களுக்கு அணிவித்தால் எவ்வளவு அழகாக இருக்கும்!

அதற்கு அந்தக் கன்னிப் பெண்கள், "ஜயந்திகா! எங்களை விட்டுப் பிரியக்கூடாதென்று உன்னுடைய அம்மா சொல்லியிருக்கிருள். ஆகையினால் சட்டென்று திரும்பி விடு" என்றார்கள்.

"இதோ ஒரு நொடியில் திரும்பி விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு ஜயந்திகா தோட்டத்துக்குள் சென்றாள்.

அடடா, என்ன அருமையான மலர்கள்! ஒன்றைப் பார்க்க ஒன்று எவ்வளவு அழகு! அவள் நடுத்தோட்டம் வரையில் போய்விட்டாள். பலவிதப் புஷ்பங்களும் அவற்றின் விதவிதமான நறுமணமும் அவளைக் கொள்ளை கொண்டன. திடீரென்று எதிரே விசித்திரமான செடி. ஜயந்திகா அதைப் போன்ற ஓர் அழகான செடியை உலகத்தில் எங்குமே காண முடியாது. அந்தச் செடியைத் தன் வீட்டின் தோட்டத்தில் பயிராக்க அவள் எண்ணினாள். உடனே அந்தச் செடியை வேரோடு பறிக்க ஆரம்பித்தாள். என்ன ஆச்சரியம்! பறிக்கப் பறிக்க, அந்தச் செடியின் வேர் வளர்ந்து வந்துகொண்டேயிருந்தது. அவளுடைய அழகான முகத்தில் முத்து முத்தாக வேர்த்தது. இனிமேல் முடியாது என்று அவள் கைவிட எண்ணிய சமயத்தில் பூமிக்குள்ளிருந்து கணகணவென்ற ஒலியும் டக் டக் என்று குதிரைக் குளம்புகளின் ஓசையும் கேட்டன. ஜயந்திகா கடைசி மூச்சாக அந்தச் செடியை இழுத்தாள். வேர் ஓடிய பாகம் வர வரப் பெரிதாகியது. தரை பாளம் பாளமாகப் பெயர்ந்தது. கடைசியாகத் தகதகவென்ற தங்க ரதம் ஒன்று

வேரின் நுனியிலிருந்து வெளியே வந்தது. நான்கு அழகான கறுப்புக் குதிரைகள் அந்த ரதத்தில் பூட்டியிருந்தன. ரதத்தின் நடுவே அழகான ஒரு மனிதன் வைரமும் வைடூரியமும் வைத்து இழைத்த தங்கக் கிரீடமொன்றை அணிந்தவாறு காட்சியளித்தான்.

"பெண்ணே, பயப்படாதே! வா, ஏறிக்கொள்! இந்த அழகான ரதத்தில் ஏறிக்கொள்ள உனக்கு ஆசையாக இல்லையா?" என்ருன்.

ஜயந்திகா பயத்தில், "அம்மா!" என்று கூவிஞள்.

"பெண்ணே ஜயந்திகா! நான் ஒன்றும் செய்யமாட்டேன். நாளைக்கு வாடிப் போகப் போகும் இந்தச் சாதாரணப் பூக்களை நீ கொய்து கொண்டிருந்தாயே, என்னுடைய அரண்மனைக்கு வா! முத்தும் ரத்தினமும் மரகதமும் மாணிக்கமும் வைத்து இழைத்த வாடாத மலர்களை உனக்குத் தருகிறேன். நான் யார் தெரியுமா உனக்கு? என்னைத்தான் பாதாள பைரவன் என்பார்கள். பாதாள உலகமெல்லாம் என்னுடையதுதான். எங்கள் அழகான உலகத்தில், நீ உல்லாசமாகவே இருப்பாய்" என்று கூறிக்கொண்டே ஜயந்திகாவின் கைகளை அவன் பற்றிஞன். ரதத்தில் ஏற்றி உட்கார வைத்துக்கொண்டான். ஜயந்திகா, "அம்மா! அம்மா! என்னைக் காப்பாற்றேன்" என்று கூவிஞள். ஆனல் ரதம் புறப்பட்டுவிட்டது.

அவளுடைய கூக்குரல் எங்கேயோ வெகு தூரத்தில் இருந்த வீட்டில் தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த அவள் அம்மாவின் காதில் எங்கே விழப் போகிறது? ரதம் வெகு தூரம் போய்விட்டது. ஜயந்திகா கதறிக்கொண்டேயிருந்தாள். பைரவன் அவளைப் பார்த்து, "ஜயந்திகா, அசடு மாதிரி அழாதே. என்னுடைய மணிமகுடம், என்னுடைய அரண்மனை, என்னுடைய எல்லாமே இனி உன்னுடையதுதான். என்னுடைய அரண்மனைக்கு வேண்டியதெல்லாம் நீ ஒருத்திதான்" என்ருன்.

"உன்னுடைய மணிமகுடமும் வேண்டாம். உன்னுடைய முத்தும் ரத்தினமும் வேண்டாம். எனக்கு என்னுடைய அம்மாவிடம் போகவேண்டும். அவளுக்கு இந்த உலகத்தில் இருப்பதெல்லாம் நான் ஒருத்திதான்" என்று விசும்பிஞள் ஜயந்திகா.

மணிக்கு ஆயிரக்கணக்கான மைல் வேகத்தில் குதிரைகள் நாலுகால் பாய்ச்சலில் பறந்து கொண்டிருந்தன. ரதம் இப்பொழுது போய்க்கொண்டிருந்த இடம் ஒரே இருள் சூழ்ந்திருந்தது. சூரியன் ஒளிரும் உலகத்திலிருந்து ஒரு புது உலகத்துக்கு வந்துவிட்டதை ஜயந்திகா உணர்ந்தாள்.

அந்த இருளிலும் பைரவனின் அழகான முகம் அவளுக்குத் தெரிந்தது. அவள் முதலில் நினைத்ததைப்போல அவன் அவ்வளவு மூர்க்கனுக இருக்க

மாட்டான் என்று அவளுக்குத் தோன்றியது.

ரதம் சென்ற பாதையெல்லாம் வைர விளக்குகள் ஜொலித்துக்கொண்டிருந்தன. அவற்றின் குளிர்ச்சி பொருந்திய பிரகாசம் தேனிலவு பொழிவதைப் போல் இருந்தது.

ஜயந்திகா பைரவனைப் பார்த்து, "உன்னுடைய அரண்மனைக்குப் போனதும் என்னை என் அம்மாவிடமே திருப்பிக் கொண்டு விட்டுவிடுவாயா?" என்று கேட்டாள்.

"அதைப்பற்றி இப்பொழுது என்ன? என் அரண்மனைக்கு வந்துவிட்டால் உனக்குத் திரும்பிப் போகவே தோன்றாது. அவ்வளவு ஜோராக இருக்கும். இதோ பார்த்தாயா, இந்த நீல நதியை? இதன் ஜலத்தில் ஒரு வாய் குடித்தால் போதும். உன் கவலை, துக்கம் எல்லாம் போகுமிடம் தெரியாது" என்று பைரவன் அந்த உலகத்திலுள்ள இருண்ட நதியையும் பிரம்மாண்டமான கோட்டைவாசலையும் அவளுக்குக் காட்டிச் சொன்னான்.

ஜயந்திகா, "நீ அமிர்தமே கொடுத்தாலும் சரிதான், இங்கு இருக்கும் வரையில் நான் எதையுமே சாப்பிடமாட்டேன்" என்றாள் தீர்மானமாக.

பைரவன் அரண்மனைக்குச் சென்றதும் அவளை உற்சாகமாக இருக்கும்படி செய்ய எவ்வளவோ முயன்றான். அரண்மனையில் உள்ள விசித்திரமான பொருள்களையெல்லாம் அவளுக்கு வழங்கினான். அவளைச் சந்தோஷப் படுத்துவதற்காகப் பாதாள ஜாதியாரின் அருமையான நடனம் ஒன்று ஏற்பாடு செய்தான். அரண்மனையில் எல்லோரும் அவளுடைய உத்தரவுக்காகக் காத்திருந்தார்கள். ருசியும் மணமும் மிகுந்த தின்பண்டங்களையெல்லாம் அவள் முன் கொண்டுவந்து வைத்தார்கள். ஆனால் ஜயந்திகாவின் முகத்தில் சந்தோஷக் குறியே ஏற்படவில்லை. அவள் ஒன்றையும் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை. "என்னை என் வீட்டில் கொண்டுபோய் விடுங்கள்" என்று ஓயாமல் சொல்லிக்கொண்டே இருந்தாள்.

அந்த அரண்மனையைப் போன்ற பிரம்மாண்டமான மாளிகை எந்த உலகத்திலும் இல்லை. தரையெல்லாம் நவரத்தினக் கற்கள் வைத்து இழைத்திருந்தது. முத்தாலான நவரத்தினக் கட்டிலும், சப்ரகூட மஞ்சமும் அந்த மாளிகையின் மத்தியிலே இருந்தன. கோமேதகக் கற்களாலான பெரிய நீராழி மண்டபம். சுற்றிலும் சரம் சரமாக வைர விளக்குகள். சூரியனே இல்லாத இந்த உலகத்தை அவை பளிச்சென்று பிரகாசமாகச் செய்து கொண்டிருந்தன. நீராழி மண்டபத்தைச் சுற்றி அலை வீசும் கருநீல ஜல நீர்த்தேக்கம். அதிலே பஞ்சணை வைத்துத் தைத்த உல்லாசப் படகு. சொர்ண மீன்கள் அந்த நீரிலே தத்திக் குதித்து விளையாடின. அவற்றின் வைரக் கண்கள் டால் வீசின. கரையிலிருந்த அழகான உத்தியானவனத்தில் பழுத்துக் கனிந்த

பலவிதக் கனிகளும், கம்மென்று மணம் கமழும் மனோகரமான மலர்களும் ஜயந்திகாவின் மனசைக் கவர்ந்தன. எதைப் பார்த்தாலும் வேடிக்கையாக இருந்தது. எதைப் பார்த்தாலும் கையிலெடுத்து விளையாட வேண்டும்போல் இருந்தது. காற்றிலே பறக்கும் தங்க விமானங்கள் அங்கே இருந்தன.

இறக்கையுள்ள அழகான பாதரட்சைகளை அணிந்து கொண்டால் நினைத்த இடத்துக்கும் போகலாம். மினுமினு என்று பளபளக்கும் அழகான கறுப்புக் குதிரைகள் என்ன, படகு போல் சிங்காரித்த பச்சை முதலைகள் என்ன, பார்க்கப் பார்க்கச் சிரிப்புத் தரும் குரங்குகள் என்ன, பட்சிகள் என்ன - இவ்விதம் சொர்க்க லோகம் போன்று இருந்தது இந்த உலகம். ஜயந்திகா அந்த அரண்மனையை அழகு படுத்தினாள். ஆயினும் அவள் முகத்தில் மலர்ச்சியோ சந்தோஷமோ ஏற்படவில்லை. வந்தது முதல் அவள் முன்னே வைத்ததையெல்லாம் மோந்து கூடப் பார்க்காமல் இருந்தாள்! அந்த அழகான இடத்தை விட்டு எப்படியாவது தப்பித்துக் கொண்டு தன் அம்மாவிடம் போய்விட மாட்டோமா என்ற ஒரே கவலைதான் அவளுக்கு. நாட்கள் சென்று கொண்டிருந்தன.



இங்கே இவள் இப்படி இருக்க, ஊரில் அவளுடைய தாய் மந்தரை என்ன செய்தாள் என்று பார்ப்போம், ஜயந்திகாவைக் காணாமல் அவள் துடிதுடித்-

துப் போனாள். கடற்கன்னிகள் கண்ணீர் வடித்தார்கள். ஒருவருக்காவது அவள் என்ன ஆனாள் என்று தெரியவில்லை. ஆற்றோடு போய்விட்டாளோ என்று மந்தரை அலறிக் கூவினாள். புஷ்பம் பறிக்கப் போன தோட்டத்தைப் போய்ப் பார்த்தாள்.

அங்கே அந்தச் செடி மட்டுந்தான் வாடி வதங்கிக் கிடந்தது. வேறு ஓர் அடையாளத்தையும் காணோம். அன்ன ஆகாரத்தை வெறுத்து மந்தரை இரவு பகல் இன்றி அலைந்தாள். காடு, மேடு, மலை, வனாந்தரம் எங்கும் சுற்றித் திரிந்தாள். கடைசியாக மனம் வெறுத்துப்போய் ஒரு மரத்தடியில் சோர்ந்து போய்ப் படுத்துக்கொண்டாள். எவ்வளவு நாள் தூங்கினாளோ!

"அம்மா" என்ற இனிய குரல் வந்தது. ஜயந்திகாதானோ என்று அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தாள். அங்கே பால்வடியும் முகக் களையுடன் ஒரு பாலசந்நியாசி நின்று கொண்டிருந்தான்.

"தாயே, நானும் பத்து நாட்களாகப் பார்க்கிறேன். பசிதாகமில்லாமல் படுத்துத் தூங்குகிறீர்களே. உங்களுக்கு ஒரு கவலையும் வேண்டியதில்லை. உங்கள் துக்கம் எதுவானாலும் அதை என் குருநாதர் போக்கி விடுவார். என் கூட வாருங்கள்" என்று அந்தப் பால சந்நியாசி கூறினான்.

மந்தரை அந்தப் பாலசந்நியாசியைப் பின்தொடர்ந்தாள். பக்கத்திலுள்ள ஆசிரமத்தில் தவம் செய்துகொண்டிருந்த முனிவரைக் கண்டு காலில் விழுந்து, "ஸ்வாமி, தாங்கள்தான் என் மகளை என்னிடம் சேர்ப்பிக்க வேண்டும்" என்றாள்.

முனிவர் கண் திறந்து பார்த்தார். பிறகு கையை அமர்த்தி, "கவலைப்படாதே; உன் மகள் மிகப் பத்திரமான ஓரிடத்தில் இருக்கிறாள். ஆனால் அவளை நீ இனி மறந்துவிட வேண்டியதுதான்" என்றார்.

மந்தரை கண்ணீர் பெருக, "ஐயோ, தாங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. எனக்கு அவள் ஒரே பெண்!" என்றாள்.

முனிவர் சிறிது நேரம் யோசித்தார். அவளைத் தன் ஆசிரமத்திலேயே அதுவரை தங்கியிருக்கலாம் என்று கூறினார். பிறகு பாலசந்நியாசியைப் பார்த்து, "சாரங்கா, அந்த இறகுப் பாதரட்சையை எடுத்து, காலில் அணிந்துகொள்!" என்று கட்டளையிட்டார். சாரங்கன் அவ்விதமே செய்தான். முனிவர் கண்ணை மூடிக்கொண்டு, "சரி, நீ புறப்படு. நீ போகவேண்டிய இடத்துக்கு அந்தப் பாதரட்சை உன்னைக் கொண்டு போய்ச் சேர்க்கும். உனக்கு வெற்றி உண்டாகட்டும்!" என்று ஆசீர்வதித்து அவனை அனுப்பினார். கண்களைத் திறக்கவே இல்லை.

பாதாள பைரவன் எவ்வளவோ முயன்றும் ஜயந்திகாவின் மனவருத்தத்தைத் தணிக்க முடியவில்லை. அவள் வைராக்கியமாக அன்ன ஆகாரத்தைத் தொடாமலே இருந்தாள். அவளிடம் ஒரு சிறு மாறுதல் மட்டும் காணப்பட்டது. முன்

போல் மணிமண்டபத்திலேயே அடைந்து கிடக்காமல் அந்த அரண்மனையில் சிறிது நேரம் உலாவி வர ஆரம்பித்தாள். பைரவனுடன் பேசுவதற்கு அவள் இப்பொழுது கூச்சப் படுவதில்லை. பழகப் பழக அவனுடைய நல்ல சுபாவம் தெரிந்தது.

ஒரு நாள் பாதாள பைரவன் அவளிடம் வந்து, "ஜயந்திகா, நீ பிடிவாதமாக இருக்க இருக்க, உன்னிடம் எனக்கு மதிப்பே அதிகமாகிறது. இந்த அரண்மனையை விட்டு நீ போய்விட்டால் எங்கும் ஒரே சூன்யமாகி விடும். உன் மனவிருப்பம் எதுவாக இருந்தாலும் சொல். நிறைவேற்றுகிறேன். ஆனால் உன் தாயிடம் உன்னை அனுப்ப வேண்டும் என்ற பேச்சை மட்டும் எடுக்காதே" என்று உள்ளம் கனியக் கேட்டான்.

ஜயந்திகா, "அதெப்படி முடியும்? நான் போகாவிட்டால் அவளையாவது இங்கே அழைத்துவர முடியாதா?" என்று கேட்டாள்.

"இந்த உலகத்தில் எந்த அந்நியராலும் நுழைய முடியாது. அப்படி நுழைய வேண்டுமானால் நம் அரண்மனையில் இருப்பது போன்ற பாதரட்சையை அணிந்துகொண்டால்தான் அவர்களால் வர முடியும். பம்பா நதிக்கரையிலுள்ள செடியையும் நீ பிடுங்கி எரிந்துவிட்டாய். அதனால் முன் போல் அந்த ரதமும் மேலே போக முடியாது" என்றான்.

ஜயந்திகா தன் தாயை இனிக் காணவே முடியாது என்ற அச்சத்தினால் நடுங்கினாள். "நாம் வந்த வழியாக இந்த ரதத்தை அனுப்ப முடியாதா?" என்று கேட்டாள்.

"முடியாது. அப்படிச் சாத்தியமாயிருந்தால் முன்பே ரதத்தை அனுப்பி உன் தாயை அழைத்து வரச் செய்திருப்பேனே!" என்றான் பைரவன்.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்தபோது விர்ரென்று ஏதோ சத்தம் கேட்டது. திடீரென்று அந்த அரண்மனையிலிருந்த வைர விளக்குகள் எல்லாம் ஒளியை இழந்தன. ஒரே அந்தகாரம் சூழ்ந்து கொண்டது. அரண்மனையிலும் ராஜ வீதிகளிலும் உள்ள பாதாள ஜாதியார், "ஹோ ஹோ" என்று கூக்குரலிட்டார்கள். பாதாள பைரவன் மட்டும் ஜயந்திகா பயப்படப்போகிறாளே என்று பிடித்துக் கொண்டான். அந்த விர்ரென்ற சத்தத்துடன், "ஜயந்திகா, ஜயந்திகா" என்ற குரல் வந்தது. யார் அவ்விதம் அழைப்பது என்று இருவருக்குமே தெரியவில்லை. என்னவோ, ஏதோ என்று ஜயந்திகா கூக்குரலிட்டாள்.

"பயப்படாதே! நான் உன் தாயிடமிருந்துதான் வருகிறேன். நீ எங்கிருக்கிறாய்?" என்று இறகுப் பாதரட்சையில் ஏறி வந்த பாலசந்நியாசி கூறினான்.

"இதோ, இங்கேதான் இருக்கிறோம்" என்று பதில் குரல் கொடுத்தாள் ஜயந்திகா. பைரவன் நடுங்கும் குரலில், "அந்தப் பாதரட்சையைக்

கழற்றிவிடு. உன் கால் பூமியில் பட்டால்தான் இங்கே வெளிச் சம் பரவும்'' என்ருன்.

அடுத்த கணம் எங்கும் ஜகஜ் ஜோதியாய்ப் பிரகாசமாகியது. எதிரே சாரங்கன் பாதரட் சையைக் கழற்றிவிட்டு நின்று கொண்டிருந்தான். பாதாள பைரவன் உடனேயே ஓடிச் சென்று அந்தப் பாதரட் சையை எடுத்துக்கொண்டான். அவன் ஜயந்திகாவைப் பார்த்து, "என் ஒருவனுடைய திருப்திக் காகஉன்னை உன் தாயிடமிருந்து பிரிக்க நான் விரும்பவில்லை. என்னைப்பற்றி இவ்வளவு நாளும் நீ நன்ருகத் தெரிந்து கொண்டிருப்பாய். ஒரே ஒரு வேண்டுகோள். அதாவது பம்பா நதித் தோட்டத்தில் உள்ள அந்தச் செடியை மறு படியும் நடுவதாக நீ வாக்களித் தால் நான் இந்தப் பாதரட் சைகளைக் கொடுத்து விடு கிறேன். எனக்காக இந்த வாக்குறுதியைத் தரமாட் டாயா?'' என்று கேட்டான்.

ஜயந்திகாவின் மனம் பாகாய்க் கரைந்து ஓடியது. "நான் அப்படியே வாக்குறுதி கொடுக்கிறேன். அதனுல் உங்க ளுக்கு என்ன பலன்?'' என்று கேட்டாள் ஜயந்திகா.

"அதை நீ நட்டால் நான் உங்கள் உலகத்துக்கு வரமுடி யும். வந்து, உன் தாயையும் உன்னையும் சேர்த்து அழைத்துக் கொண்டு வருவேன். அப்பொ ழுதுகூட நீ வரச் சம்மதிக்க மாட்டாயா?''

ஜயந்திகாவின் உள்ளம் குளிர்ந்தது; முகம் மலர்ந்தது. "நான் அப்படியே செய் கிறேன். என்னுல் இதுவரையில் எப்படி என் தாயைப் பிரிந் திருக்க முடியவில்லையோ அப் படியே உங்களையும் இனிப் பிரிந் திருக்க முடியாது'' என்ருள்.

பைரவன் பாதரட்சையைக் கொடுத்தான். ஜயந்திகாவுக்கு அரண்மனையிலிருந்து இன் னொரு ஜோடியை எடுத்துக் கொடுத்தான். அடுத்த கணம் அவர்கள் மறைந்துபோனுர்கள்.

முனிவர் கண் திறந்தார். எதிரே ஜயந்திகாவும் சாரங் கனும் நின்ருர்கள். மந்தரை ஓடி வந்து ஜயந்திகாவைக் கட் டிக் கொண்டாள். பிறகு அவர் கள் முனிவரிடம் விடை பெற் றுக்கொண்டு பம்பா நதிக் கரையை அடைந்தார்கள். ஜயந்திகா முதல் காரியமாக, பைரவனிடம் வாக்குக் கொடுத் படி அந்தச் செடியைப் பழையபடி நட்டு வைத்துத் தண்ணீர் ஊற்றினுள். அடுத்த மாதம் அவளுக்கும் அந்தச் செடியின் வேர் வழியாக ரதத் தில் வெளிவந்த பைரவனுக்கும் அதிவிமரிசையாகக் கல்யாணம் நடந்தது. முனிவர்தான் அதை முன்னின்று நடத்தி வைத்தார். "நீங்கள் எப்பொழுது நினைத் தாலும் இந்த உலகத்துக்கு வர லாம்; போகலாம்'' என்றும் ஆசீர்வதித்தார்.

ஜயந்திகா அந்தக் கடற் கன்னிப் பெண்களை மறக்கவே யில்லை. எப்பொழுது இந்த உலகத்துக்கு வந்தாலும் அவர் களுடன் சந்தோஷமாகச் சிறிது நேரமாவது பொழுது போக்காமல் போக மாட்டாள்.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(U) 10. உண்ணுமலை, A. R. R. M., கோட்டையூர். 11. உம்முல் அமீன், கொழும்பு. 12. உத்தமன், N., திருவள்ளூர். 13. உமா, T. N., சென்னை-17. 14. உன்னி கிருஷ்ணன், வாசுதேவன், ராதா, சம்பகம், சந்திரசேகரன், M., மேட்டூர் அணை. 15. உமாபதி, T. B., சென்னை-21. 16. உன்னி கிருஷ்ணன், கங்காதரன், J., புது டில்லி. 17. உன்னி, N. K., ஒட்டப்பாலம். 19. உப்பிலி. S., கும்பகோணம். 20. உமா, ரவி சந்திரன் K., புது டில்லி.

(V) 65. வத்ஸலா, N. S., சென்னை-4. 66. வேலாயுதம், பரிமளம், ஜயசிங், மனோகரன், K., சென்னை-11. 67. வத்ஸலா, N., சென்னை-24. 68. வேலு, C. V. K., சென்னை-21. 69. வைத்தாச்சி G. R., சென்னை-24. 70. வேங்கடரமணி, P. K., சென்னை-3. 71. வேங்கடரத்தினம், S., சென்னை-4. 72. வேங்கடாசலம், C., சென்னை-2. 73. வனமாலா, R., சென்னை-4. 74. வேங்கடேசன், N., சென்னை-4. 75. விசாலம், லக்ஷ்மி, ரங்கநாதன், விமலா, V., பல்லாவரம். 76. ராமகிருஷ்ணன், விஜயலக்ஷ்மி, S., சென்னை-2. 77. வடிவேலு, P. G., சென்னை-1. 78. வைத்தியநாத், T. V., சென்னை-4. 79. வேலாயுதன், K., சென்னை-13. 80. விஜயா, R., சென்னை-4. 81. வேங்கடராமாநுஜம், P. N., சென்னை-7. 82. வேணுகோபாலன், K., சென்னை-4. 83. வெங்கடேசன், பத்மாவதி, ஜானகி, பிரேமா, T. R., சென்னை-17. 84. வசந்தா, B., சென்னை-18. 85. வேலுசாமி, S. K, உடுமலைப்பேட்டை. 86. வேணுகோபால், S., டோமல்குடா. 87. வசந்தா, R., சென்னை-21. 88. விசுவநாதன், K., கான்பூர். 89. விஜயகுமாரி, தினகுமார், கார்த்திகேயன், T., சென்னை-14. 90. வள்ளியதாஸ், V., தாராபுரம். 91. வேங்கடேசன், K., சென்னை. 92. வள்ளி, A., கீழப்பட்டணம். 93. விசுவநாதன், T. R., மதுரை. 94. வஸந்தா, வனஜா, S., திருக்காட்டுப்பள்ளி. 95. விசாலாக்ஷி, R. G., ஜீயபுரம். 96. வரதராஜன், N. S., கல்லூர். 97. வேங்கடராமன், ரகுபதி, R. B., சென்னை-8. 98. வசந்தா, K., புது டில்லி. 99. வரதன், G., சென்னை-1. 100. வேணுகோபால், C. L., சென்னை-4. 101. வேங்கடரமணி, நடராஜன், ராஜாமணி, K., நித்தியவனம். 102. வீரராக

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..........................

(தேதி, மாதம், வருஷம்)

மே '51 கூபன் நெ:

வன், முத்துலக்ஷ்மி, R.T., சாத்தூர். 103. வசந்தா, R. S., சென்னை-4. 105 விசுவநாதன், G. S., கல்கத்தா. 106. வேங்கடராமன், D. S., செங்கோட்டை. 107. வேதாரண்யம், விஜயம், N. R., திருத்தணி. 108. வீரமணி, K., சென்னை-4. 109. வேங்கடேசன், T. R., திருச்சி. 111. வசந்தா, J., செங்கம். 112. விட்டல், S. P. R., புகலூர். 113. வீரராகவன், T., சேத்துப்பட்டு. 114. வெள்ளைப்பாண்டி, M., திருவேங்கடநாதபுரம். 115. வாசுதேவன், C., சென்னை-1. 116. விசுவநாதன், A., கடலூர், N. T. 117. வேங்கடேசன், நடராஜன், S., பெங்களூர். 118. விசுவலிங்கம், K. S. E., டிக்கோயா. 119. விசுவநாதன், L., பொன்மலை. 120. விசுவேசுவரன், A., சென்னை-14. 121. விசுவநாதன், G., மேட்டுப்பாளையம். 122. விருத்தாம்பாள், L., திருவண்ணாமலை. 123. விசுவநாதன், திருவண்ணாமலை. 124. வேங்கடரமணி, G. S., அண்ணாமலைநகர். 125. வேங்கடராமன், N., சென்னை-17. 126. வைத்தியநாதன், L. S., திருச்சி. 127. விஜயா, V., விஜயவாடா. 128. வரதராஜன், S. S., வாளாடி. 129. வரதராஜன் R., பவானிசாகர்.

(Y) 7. யோகநாதன், முத்தையா, M., மேல்பாதி. 8. யூசிர் D. M., கொழும்பு-12.

(Z) 1. ஸாம்பன், N., சிங்காநல்லூர்.

A. 115. அம்பலவாணன், M., மன்னார்குடி. 116. அப்துல் ரஷீத் K., வளவனூர். 118. ஆனந்தநாயகி, N. V., கண்டி. 119. அபூபக்கர், ஸாப்ஜான், J. Md., கீழவாசல். 121. அப்துல், A., அறகண்டநல்லூர். 122. அஜீஸ், B., மதுரை. 123. ஆதப்பன், A.T., (விலாசம் எழுதவில்லை.) 124. அண்ணாமலை, அரு., பள்ளத்தூர். 125. ஆறுமுகம், K., மணப்பாறை. 126. அண்ணாமலை, பாலசுப்பிரமணியன், பாலசுந்தரம், S., மேட்டூர் அணை. 127. அருணாசலம், R. S., ராஜபாளையம். 128. அஜீத் பிரசாத், C., தஞ்சாவூர். 129. ஆதித்தன், விசுவநாதன், M. V., கோயம்புத்தூர். 130. அழகப்பன், P., விராமதி. 132. ஆறுமுகம், M., திருவேங்கடநாதபுரம். 134. அருணகிரிநாதன், N., ஊத்துக்குழி ஜமீன். 135. அழகப்பன், M., கீழச்சிவல்பட்டி. 136. ஆனந்தன், செல்வநாயகம், S., மன்னார்குடி. 137. அனந்தாச்சாரி, ரமணி, சிதம்பரம். 138. அழகு நாகப்பன், புது வயல். 139. அன்னபூர்ணி அம்மாள், V. S., முள்ளக்கல். 140. ஆனந்தகுமார், N., மதுரை. 141. அய்யாசாமி, S. N., சிங்காநல்லூர்.

(மீதி அடுத்த இதழில்)

★★★★★★★★★★★★★★★

கண்ணன்

மாதந்தோறும்

இங்கிலீஷ் 1-ஆம் தேதி

வெளிவரும்

★★★★★★★★★★★★★★★

தபால் விளையாட்டு
கே. சீதாராமன்



தபால் விளையாட்டு ரொம்பச் சுவாரஸ்யமானது.

முதலில் சுண்ணாம்புப் பொடியைக் கொண்டு இரண்டு வட்டங்கள் படத்தில் காட்டியபடி போடவேண்டும்.

முக்கிய கவனிப்பு:—'மணியார்டர், கடிதம், ரிஜிஸ்டர் கடிதம்' என்று தலைவன் கூறினால் ஓட வேண்டிய குழந்தைகள் தவளையைப் போல் தத்திக் குதித்துக் கொண்டே ஓடவேண்டும். 'தந்தி' என்றால், வேகமாக ஓடவேண்டும். 'அவசரத் தந்தி' என்றால் தலைவன், '1, 2, 3' என்று சொல்வதற்கு முன்பே ஓடவேண்டும். 'ஆகாயத் தபால்' என்றால் பறவைகள் இறக்கைகளை அடித்துக் கொண்டு பறப்பதுபோல் கைகளை வீசிக்கொண்டு ஓடவேண்டும். அவசரத் தந்தியைத் தவிர மற்றவைகளுக்குத் தலைவன், 1, 2, 3 சொன்ன பிறகுதான் ஓடவேண்டும்.

ஆடும் முறை:—மொத்தப் பிள்ளைகளை, பிரிவுக்கு 6 பேராகப் பிரிக்கவேண்டும். ஒவ்வொரு பிரிவையும் படத்தில் காட்டியது போல் வட்டத்தினுள் நிறுத்தி வைக்கவேண்டும். தலைவன் வட்டத்துக்கு மத்தியில் நின்றுகொண்டு, 'கடிதம்' என்று சொன்னால் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள முதல் பையன் ஓடத் தயாராக இருக்க வேண்டும். தலைவன், '1, 2, 3' என்று சொன்னவுடனே அந்தப் பிள்ளைகள் இரு வட்டங்களுக்கும் இடையில் உள்ள பாகத்தில் தவளையைப்போல் குதித்துக் குதித்து வந்து அவரவர்கள் போகவேண்டிய வழியாகப் போய்த் தலைவனைத் தொடவேண்டும். முதலில் தலைவனைத் தொடும் பிரிவுக்கு மூன்று எண்ணிக்கை. இரண்டாவதாகத் தொடுவதற்கு இரண்டு எண்ணிக்கை. மூன்றாவதாகத் தொடுவதற்கு ஒரே எண்ணிக்கை. இவ்வாறு ஆறு பிள்ளைகளும் வந்த பிறகு ஆட்டம் முடியும். ஒவ்வொரு பிரிவுக்கும் வந்த எண்ணிக்கையைக் கணக்கிட்டு, அதிக எண்ணிக்கை பெற்ற பிரிவே வெற்றி பெற்றதாகும்.

குறிப்பு:— (1) தலைவன் கடிதம், ரிஜிஸ்டர், அவசரத் தந்தி, இவற்றை அவன் இஷ்டம்போல் மாற்றி மாற்றிச் சொல்வான். பிள்ளைகள் அதற்குத் தக்கவாறு உஷாராக இருக்கவேண்டும். (2) பெரிய பிள்ளைகளாக இருந்தால் ஒவ்வொரு பிரிவுக்கும் பக்கத்தில் ஒரு பெட்டியை வைத்து அதில் ஆறு கார்டுகளில் தலைவன் சொல்வதை எழுதிவைத்து விடலாம். தலைவன் 'ஒன்று' என்றால் கடிதத்தை எடுக்கவேண்டும். 'இரண்டு' என்றால் படிக்கவேண்டும். 'மூன்று' என்றால் ஓடவேண்டும். அவசரத் தந்தியானால் கடிதத்தை படித்த உடனே ஓடவேண்டும். ஆடிப் பாருங்கள், அற்புதமான ஆட்டம்!

எண்ணிலே படங்கள்

(1 முதல் 9 வரை) “மூட்டை”



புத்திசாலி

கல்யாண்

கொஞ்ச நாளைக்கு முன் ஓர் ஊரில் ஒரு ஜமீன்தார் இருந்தார். சாப்பிடுவதில் அபாரப் பிரியம் கொண்டவர். ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பாடும், ஐந்து ஆறு வேளை டிபனும் சாப்பிடாவிட்டால் அவருக்குத் தூக்கமே வராது. இவ்வளவையும் சாப்பிட்டுவிட்டு, எந்தவிதத் தேகப்பயிற்சியும் செய்யாமல் சோம்பேறியாகவே இருப்பார்.

நாட்களாக ஆக, ஜமீன்தார் இவ்விதம் அதிகமாகச் சாப்பிட்டுவிட்டு, சோம்பேறித்தனமாக இருந்ததன் பலனாக அவருக்கு ஊளைச் சதை போட ஆரம்பித்துவிட்ட்து. கொஞ்சம் கொஞ்சமாகப் பருத்து ஒரு சிற்றானையைப் போல ஆகிவிட்டார். அவர் கழுத்து, உடம்புக்கும் தலைக்கும் இடையே அகப்பட்டு, இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. அவருடைய உடுப்புக்களெல்லாம் ஒவ்வொரு மாதமும் வேறு அளவு கொடுத்துத் தைக்கும் நிலைமைக்குப் பருத்து வந்தார். இதைக் கண்ட திவான் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்கள் பயந்து போனார்கள். அநேக வைத்தியர்களை வரவழைத்து ஆலோசனை செய்தார்கள். வந்த வைத்தியர்களெல்லோரும், ஜமீன்தார் சாப்பாட்டைக் குறைத்துச் சாப்பிடவேண்டும் என்று சொன்னார்கள். அவ்வளவுதான்! வந்துவிட்டது கோபம், ஜமீன்தாருக்கு. அந்த வைத்தியர்களையெல்லாம் பிடித்துச் சிறையிலடைத்து விட்டார். ஏனென்றால், ஜமீன்தாருக்கு சாப்பாடு இல்லை என்றால் உயிரே போய்விடுமே!

ஜமீன்தார் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் காற்று ஊதிய பலூனைப் போல மேலும் ஊத ஆரம்பித்

தார். அரண்மனையிலுள்ள வாசற்படிகளையெல்லாம் இடித்துப் பெரியதாகக் கட்டவேண்டி வந்தன. நடக்க முடியாமல், அவரை ஆட்கள் தூக்கும்படியாகிவிட்டது. எப்போதும், ஆசனப்பலகையில் அமர்ந்து சாப்பிடுபவர், மேஜை நாற்காலி போட்டுச் சாப்பிடும்படியாகி, கொஞ்சநாளில் அதுவும் மாறி, ஆட்கள் எடுத்து ஊட்டும் நிலையை அடைந்தார். அக்கம் பக்கம் திரும்பிப் பார்க்க வேண்டுமென்றால் உடம்பையே அந்தப் பக்கம் திருப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பாவம்! இப்படியாகப் பெருத்து, ஊதிக்கொண்டே போய் வெடிக்கும் வெள்ளரிப் பழத்தின் பக்குவத்தை அடைந்தார் நம் ராஜாதிராஜ ராஜ கம்பீர போஜனப்ரிய ஜமீன்தார்.

நிற்க, அந்த ஊரில் கோபு என்ற ஒரு மகா புத்திசாலிப் பையன் இருந்தான். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்து முன்னுக்கு வந்தவன். ஆனால், வேலை ஒன்றும் கிடைக்காமல் கஷ்டப்பட்டான். ஜமீன்தார் நாளுக்கு நாள் பெருத்து வருவதையும், வைத்தியர்கள் சிறையிலடைக்கப் பட்டதையும் அவன் கேள்விப்பட்டான். அவனுக்கு உடனே ஒரு யோசனை தோன்றியது. நல்ல உடைகளாக ஒரு செட் வாடகைக்கு வாங்கிக் கொண்டு வந்தான்.

மறுநாள் அந்த உடைகளை அணிந்துகொண்டு கம்பீரமாக அரண்மனையை நோக்கிச் சென்றான். ஜமீன்தாரைக் கண்டு தனக்கு வைத்தியம், சோதிடம், மாந்திரிகம் எல்லாம் தெரியுமென்று ஓரேயடியாக மூட்டை அளந்தான். ஜமீன்தார் நிஜந்தானென்று நம்பிவிட்டார். கோபு அவருக்கு வைத்தியம் செய்ய ஆரம்பிக்கு முன் அவர் கை ரேகைகளைப் பார்ப்பதுபோல் பாவனை செய்துவிட்டு, "மகாராஜா! இன்னும் ஆறே மாதம் தான் தாங்கள் உயிருடன் இருப்பீர்கள்" என்று சொன்னான். ஜமீன்தாருக்குப் பிரமாதமான கோபம் வந்துவிட்டது. கோபுவை உடனே கொண்டுபோய்க் கொன்றுவிடும்படி உத்தரவிட்டார்.

கோபு, பயந்துவிடாமல் ஜமீன்தாரிடம், "என்னை ஆறு மாதம் வரையில் உயிருடன் சிறையில் வைத்திருங்கள். அதற்குப் பிறகு தாங்கள் இறக்காவிட்டால் என்னைக் கொன்றுவிடலாம்" என்று வெகு விநயமாகக் கேட்டுக்கொண்டான்.

ஜமீன்தார் அதன்படியே ஒப்புக்கொண்டார்.

இப்பொழுது ஜமீன்தாரைத் தாம் இறந்துவிடப் போகிறோம் என்ற கிலி பிடித்துக் கொண்டது. அதே ஏக்கமாய், தூக்கம் சாப்பாடு இல்லாமல் நாட்களைக் கழிக்க ஆரம்பித்தார். கவலை, தூக்கமின்மை, இரண்டினாலும் சாப்பிடாமலிருத்தல் இவையெல்லாம் அவருடைய உடலை வாடச் செய்தன. ஆனால் ஜமீன்தாருக்கு அவர் உடம்பு இளைத்து வருவது தெரியவே இல்லை. ஏக்கத்தினால் கண்ணாடியில்கூட அவர் தம்மைப் பார்த்துக்கொள்வதில்லை.

இப்பொழுது ஜமீன்தார் நன்ருக இளைத்துப்போய்விட்டார். பழைய உடைகளெல்லாம் அவருக்குப் பெரிதாக இருந்தன. வேறு உடைகள் தயாராகி அணிந்துகொண்டார். இளம் வயதில் இருந்த அழகு, உயரம், மெலிவு இவைகளுடன் இப்போது அவர் காட்சியளித்தார்.

ஆறு மாத கெடு முடிந்தது. மறுநாள் காலையில் ஜமீன்தார் தாம் உயிருடன் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். கண்ணைக் கசக்கி விட்டுக் கொண்டார். சுற்றும் முற்றும் பார்த்தார். உடம்பைக் கிள்ளிப் பார்த்தார். என்ன ஆச்சரியப்! அவர் உயிருடன்தான் இருந்தார். பிறகு கண்ணுடியின் எதிரில் போய் தம்மைப் பார்த்தார். தூக்கிவாரிப் போட்டது அவருக்கு. கண்ணுடியின் முன்னுல் யாரோ ஓர் அழகிய இளைஞன் நிற்பதுபோ லிருந்தது. அவருக்குச் சிறையிலிருக்கும் கோபுவின் ஞாபகம் வந்தது. ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. உடனே கோபுவைக் கொண்டு வரும்படி உத்தரவிட்டார்.

அவன் வந்ததும், "ஜோஸ்யப் புலியே! இப்பொழுது என்ன சொல்கிருய்? நான் இறக்கவில்லை. உயிருடன் இருக்கிறேன். நீ சொன்னது பொய்யாகிவிட்டது. நீதான் இறக்கப் போகிருய்!" என்ருர்.

"மகாராஜா, மன்னிக்க வேண்டும். கொஞ்சம் பொறுங்கள்! இப்பொழுது தங்கள் உடம்பைப் பார்த்தீர்களா?" என்ருன் கோபு நிதானமாக.

"ஏன், உடம்புக்கென்ன?"

"ஆம் மகாராஜா! ஆனுல் இளைத்துப்போய் அழகாக இருக்கிறீர்கள், இல்லையா?" என்ருன் கோபு கம்பீரமாக.

"ஆமாம்."

"அதற்குக் காரணம் யார் என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். தங்கள் உடம்பின் பருமன் குறைந்து பழைய அழகு உண்டாவதற்காக நான் சோதிடம், வைத்தியம் எல்லாம் தெரியும் என்று பொய் சொல்லிக்கொண்டு வந்தேன். தாங்கள் இறந்துவிடுவீர்களென்றும் சொன்னேன். அதை நம்பிக் கொண்டு, அதே ஏக்கத்தில் தாங்கள் இளைத்துப் போய்விட்டீர்கள்!" என்ருன் கோபு.

"சபாஷ்! நீதான் புத்திசாலி. நல்ல வேலை! நீ பிழைத்தாயே!" என்று சொல்லிவிட்டு, கோபுவை அன்று முதல் ஒரு பெரிய உத்தியோகத்தில் அமர்த்தினுர்.

211780

கேட்டீர்களா!

சூரியனில் கறுப்புப் புள்ளி

சூரியனில் இரண்டு கறுப்புப் புள்ளிகள் தோன்றியிருக்கின்றனவாம். ஒன்று ஏப்ரல் 24-ஆம் தேதி காலை 10 மணிக்கு மத்திய நீர்க்கரேகையை (சென்டிரல் மெரிடியனை)க் கடந்ததாகவும் இன்னொரு புள்ளி 26-ஆம் தேதி காலை 11 மணிக்கு மத்திய நீர்க்க ரேகையைக் கடந்ததென்றும் கோடைக்கானலிலுள்ள சூரிய கோள ஆராய்ச்சி நிலையம் கூறுகிறது.

காசி ஹிந்து சர்வகலாசாலை

ஜாதி, மத பேதமின்றி எவரும் காசி ஹிந்து சர்வகலாசாலையில் சேர்வதற்கு, பார்லிமென்டில் இன்று கல்வி மந்திரி மௌலானா அபுல் கலாம் ஆஸாத் ஒரு மசோதாவைச் சமர்ப்பித்தார். அதேபோல் அலிகார் முஸ்லிம் சர்வகலாசாலையிலும் யாரும் சேர அந்த மசோதா வகை செய்கிறது.

புதிய அணு ஆயுதங்கள்

முன்பு தயாரித்தவற்றைக் காட்டிலும் அதிக சக்தி வாய்ந்த அணுக்குண்டும், அணுக்குண்டு வெடிகளை வீசியெறியும் பிரம்மாண்ட யந்திரமும் புதிய வகை ரேடியோ ஆக்டிங் ஆயுதங்களும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. ரேடியோ ஆக்டிங் ஆயுதத்தை உபயோகித்தால் உயிர் நஷ்டமே இல்லாமல் ஒரு நகரத்தையே கைப்பற்றிவிடலாமாம்.

சுபாஷ் போஸின் குமாரி

தலைசிறந்த தேசபக்தர், வங்காளச் சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸுக்கு ஸ்விட்ஜர்லந்தில் எமிலிஷிங்கில் என்ற மனைவியும் ஒரு பெண் குழந்தையும் இருக்கிறார்கள். குழந்தை அநீதாவுக்கு இப்போது எட்டு வயதாகிறது. அவர்களை இந்தியாவில் வந்து தங்கி விடும்படி பிரதம மந்திரி நேரு கேட்டுக்கொண்டாராம். ஆனால் அவர்கள் இங்கே வர விரும்பவில்லை என்று தெரிகிறது.

மக்ஆர்தர்

ஐக்கிய நாடுகள் சபையின் கீழ்ப் பிரதேசத் தளகர்த்தராகவும் ஆக்கிரமித்த ஜப்பானின் சுப்ரீம் கமாண்டராகவும் இருந்து வந்த அமெரிக்கத் தளபதி மக்ஆர்தரை ஜனாதிபதி ட்ரூமன் பதவியிலிருந்து சென்ற மாதம் நீக்கிவிட்டார்.

செய்திகளை அனுப்பும் புதிய கருவி

ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு ஒரு நிமிஷத்தில் 3,000 வார்த்தைகள் வீதம் செய்திகளை அனுப்பக்கூடிய ஒரு புது வகைக் கருவியை அமெரிக்காவில் "வெஸ்டர்ன் யூனியன் கம்பெனி" தயாரித்திருக்கிறது. சாதாரண டெலி டைப்ரைட்டர் ஒரு மணிக்கு 3,000 வார்த்தைகளைதான் அனுப்புகிறது. மற்றக் கருவிகளைப் போலவே இப்புதுக் கருவியும் படங்கள், எழுத்து, அச்சடித்த விஷயம் எல்லாவற்றையும் அனுப்ப உதவுகிறது.

உல்லாசப் பிரயாணம்

சென்னையிலிருந்து நான், என் தம்பி, அப்பா, அம்மா எல்லாரும் ரெயிலில் போனோம். அப்பா காசு கொடுத்து டிக்கட் வாங்கினார். உள்ளே போனோம். பழம், சோடா எல்லாம் அங்கே விற்றார்கள். ரெயில் எஞ்சின் புகை விட்டுக்கொண்டு நின்றது.

ரெயிலில் உட்கார்ந்து கொண்டதும் 'குப்குப்' என்று ரெயில் புறப்பட்டது. நன்றாக இருட்டிவிட்டது. என் தம்பி வெளியே எட்டிப்பார்த்தான். கண்ணில் கரி விழுந்துவிட்டது. அழுதான். அப்புறம் தூங்கிப் போனோம். காலையில் எழுந்த போது ஊர் வந்துவிட்டது. எப்படி எங்கள் உல்லாசப் பிரயாணம்?

—கே. சாவித்திரி (நம்பர் வரவில்லை), தஞ்சாவூர்.

(இதுதான் உல்லாசப் பிரயாணமா? உல்லாசத் தூக்கம் எப்படி என்று கேள்! ஆ-ர்.)

* * *

கெட்டிக்காரக் கிட்டு

கிட்டு கிட்டு கிட்டுவாம்
கெட்டிக் காரக் கிட்டுவாம்
எட்டே எட்டு வயதினை
எட்டி விட்ட கிட்டுவாம்!
பட்டுப் பட்டுச் சட்டையே
கிட்டு என்றும் போடுவான்
துட்டுத் துட்டுப் பையிலே
கொட்டிக் கொட்டி இருக்குமாம்!
தட்டுத் தட்டாய் வீட்டிலே
லட்டு லட்டாய் இருக்குமாம்!
கிட்டு, தங்கை பட்டுவை
விட்டு விட்டுத் தின்னுவான்!
லட்டைக் கேட்கப் பட்டுவே
கிட்டு விடம் வந்திட்டால்,
குட்டி விட்டுக் கிட்டுவும்
சிட்டுப் போல ஓடுவான்.

— பூவண்ணன், சென்னை-7.

ஏமாற்ற வேண்டாம்

ஆசிரியருக்கு, வணக்கம்.

சில அங்கத்தினர்கள் கண்ணன் தபால் பகுதியில் பேனு நண்பர் சங்கம், தபால் தலை, தீப்பெட்டிப் படம் சேகரிப்பவர்கள் என்று எழுதுகிருர்கள். ஆனல் அவர்களுக்குக் கடிதம் எழுதினுல் பதிலே வருவதில்லை. இதை நிவர்த்தி செய்யுமாறு நான் வேண்டிக்கொள்கிறேன்.

M. P. அகமது முகைதீன் (A.60), ஏர்வாடி.

(கண்ணன் அங்கத்தினர்கள் இப்படி ஏமாற்றக்கூடாது என்று நானும் கேட்டுக்கொள்கிறேன். ஆ-ர்.)

* * * *

சிங்கம்

—ஒரே கோட்டில் படம்

டி. வி. ரங்கசாமி, ஆரணி.

பேனா நண்பர்கள்

தபால் தலை சேகரிப்பவர்கள்:

(1) S. நம்பி நாராயணன், திரு இருதய பாடசாலை, பணகுடி, (திருநெல்வேலி.)
(2) P. S. மாணிக்கம், No. 116 - 2, மேற்குப் பல்லடம், கொசவம்பாளையம் (ரோடு), பல்லடம் போஸ்ட்.
(3) ம. ப. கனகசபாபதி, 84, 85, செம்புதாஸ் தெரு, ஜி. டி. சென்னை.

* * * *

ஒன்பது காய்கள்

① ⑤ ⑧ ⑦ ⑨

② ③ ④ ⑥

மேலே உள்ள 158ஐ 23 - ஆல் பெருக்குங்கள். விடை: 3,634. வலது பக்கத்திலுள்ள 79ஐ 46 - ஆல் பெருக்கினாலும் வரும் விடை 3 634தான். இதில் இப்போது சொல்லப் போகும் கணக்கு என்ன வென்றால் அதிகப்படியான விடை வரக்கூடிய விதத்தில் நீங்கள் இந்த இரண்டு வரிசைக் காய்களையும் மாற்றி வைக்கவேண்டும். இரண்டு பக்கத்திலும் ஒரே விடைதான் கிடைக்கவேண்டும். ஒரு பக்கம் மூன்றும் இரண்டுமாகவும் மறுபக்கம் இரண்டும் இரண்டு மாகத்தான் காய்களை வைக்கவேண்டும். எங்கே, வையுங்கள் பார்க்க லாம். உங்கள் விடையைக் கடைசிப் பக்கத்திலுள்ள விடையுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்.

K. நரசிம்மன், (N. 14)

* * * *

விடுகதை

நீரிற் பிறந்து நெடுவான் திரிந்தோடி
ஊரெல்லாம் வீணையை ஓதுவித்துக்—கூருசி
மக்களுடற் பாய்ச்சும் மருத்துவனார் தம்பெயரை
தக்கணமே என்னிடத்துச் சாற்று.

—வே. பா. பாபுல், அரூர்.

விடை: கொசு

கண்ணன் கிளைக் கழகம்

கீழ்க்கண்ட ஊர்களில் கண்ணன் கிளைக் கழகங்கள் ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்டுள்ளன.

(1) வில்லிவாக்கம்:
- உபதலைவர்: S. B. S. மணி M. 22.
- செயலாளர்: P. V. சுப்பிரமணியன் S. 439
- பொருளாளர்: R. சுப்பிரமணியன் S. 306

இதுவரை 30க்கு மேற்பட்டவர்கள் இதில் அங்கத்தினராயிருக்கிறார்கள்.

(2) திருவல்லிக்கேணி:
- உபதலைவர்: N. சந்திரராவ்
- செயலாளர்: B. ராகவேந்திரன்
- பொருளாளர்: R. வேங்கடேசுவரன்

16 பேர் கொண்ட ஒரு செயற்குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

(3) பணகுடி, (திருநெல்வேலி):
- உபதலைவர்: தெ. குமாரசாமி (K. 163)
- செயலாளர்: ச. வீரபாகு (V. 185)
- பொருளாளர்: நம்பி நாராயணன் (N. 227)

11 அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

மதுரையில் கண்ணன் கழகத்தின் கிளைக் கழகம் ஆரம்பிப்பதற்காக 11-5-51 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு, காக்காத் தோப்புத் தெருவில் உள்ள சூரியநாராயண சாஸ்திரியார் பள்ளிக்கூடத்தில் ஒரு கூட்டம் நடைபெறும். மதுரையிலுள்ள அங்கத்தினர்கள் தங்கள் பாட்ஜுகளுடன் வந்திருந்து கிளைக் கழக நிர்வாகிகள் தேர்தலில் கலந்துகொள்ளலாம்.

K. ஜயராமன் (J. 52), ந. ரங்ககிருஷ்ணன் (K. 244), 48, பேச்சியம்மன் கோவில் தெரு, மதுரை.

வேலூரில் உள்ளவர்கள் தேர்தல் நடப்பதற்காகத் தங்கள் பெயரையும் விலாசத்தையும் V. N. பத்மாவதி, அல்லாபுரம், தொரப்பாடி போஸ்ட், வேலூர் என்ற விலாசத்துக்கு எழுதவேண்டும்.

* * * *

ஒன்பது காய்கள் விடை

174	96	விடை: 5,568.
32	58	

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATRAMAN.

பல குழந்தைகளின் ஆசைக் கூக்குரலும் வேண்டுகோளும் உங்கள் காதில் விழுந்தும், நீங்கள் இரண்டாம் முறை சென்னையில் கூட்டம் நடத்துவது நியாயமா? இது பொருமை என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் பொருமை அல்ல!!!

— இ. கோ. ராஜன் (S.446), பீளமேடு.

[நான் ஒன்று எழுதுகிறேன். வருத்தப்படாமல், கோபிக்காமல் கேள். இல்லை, படி. உங்கள் ஊரில் நடத்தும்படி எழுது; நியாயம். இன்னொரு ஊரில் எதற்காக என்று எழுதலாமா? இது பொருமை என்று நான் சொல்லவில்லை, பொறுமை இல்லை என்று மட்டும் சொல்லுவேன். ஆ-ர்.]

*　　•　　•

முடியுமா?

இந்தப் படம் ஒரு நகரத்தின் படம். அதில் வளைவு வளைவாகக் கோடுகளும் வட்டக் கோடுகளும் இருக்கின்றன. வட்டம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முக்கியமான இடம். ராமுவும் சோமுவும் சுற்றிப் பார்க்க எண்ணினார்கள். ராமுவைப் பார்த்துச் சோமு, "போன இடத்துக்கு மறுபடியும் போகாமல், நட்சத்திரத்திலிருந்து கிளம்பி 'னே' என்ற கட்டத்துக்குப் போய்ச்சேர முடியுமா?" என்று கேட்டான். ராமு அதற்கு, "நீ போக முடியாது அப்பனே!" என்றான். இதில் யார் சொன்னது சரி; முடியுமா, முடியாதா என்று நீங்கள் சரியாகப் பார்த்துக் கண்டுபிடியுங்கள். உங்களால் முடியாவிட்டால் கடைசிப் பக்கத்திலுள்ள விடையைப் பாருங்கள்.



—V. கிருஷ்ணமூர்த்தி, சென்னை-1

*　　•　　•

கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். கண்ணன் கழகக் கூட்டம் இலங்கையில் எப்போது நடக்கும்? என் வீட்டில் உங்களுக்காகக் காத்திருக்கும் டீ பார்ட்டிக்கு வருவீர்களா? எங்கள் தொழிற்சாலைக்குக் கட்டாயம் வரவேண்டும். நான் இலங்கையில் உள்ள பெண் அங்கத்தினர்களுக்கு ஒரு கிளைக் கழகம் நடத்தப்போகிறேன். அதனால் இலங்கையில் உள்ள அங்கத்தினர்கள் தங்கள் விலாசத்தை எனக்கு எழுதவேண்டுகிறேன். நான் G. S. விசாலம் என்ற சகோதரிக்குக் கடிதம் எழுதினேன். மற்ற எல்லாரும் பதில் எழுதினார்கள். இக்குழந்தை மட்டும் பதில் எழுதாதது குறித்து வருந்துகிறேன். மன்னிக்கவும்.

— ஜயலக்ஷ்மி, S. M. N. நாயகம், 6, கிளென் ஆபர் பிளேஸ், பம்பளப்பிட்டியா, கொழும்பு-4. (இலங்கை)

[இலங்கையில் உள்ள பெண் அங்கத்தினர்கள் அவசியம் தங்கள் விலாசத்தை இந்தக் குழந்தைக்கு எழுதுவார்கள் என்று நம்புகிறேன். ஆ—ர்.]

கண்ணனின் ருசி அமிருதத்தைப் போன்றது. கண்ணனின் குரல் கோபாலனுடைய குழலின் இன்னிசை போன்றது. கண்ணனின் தோற்றம் மாயக் கிருஷ்ணனுடைய திருமேனியின் எழிலைப் போன்றது என்றெல்லாம் நான் வர்ணிக்கலாமா?

— V. அகஸ்தியா (A.9)

[வர்ணிப்பதற்கென்ன? பேஷாக வர்ணிக்கலாம். ஆனால் என்னிடமேயா? ஆ-ர்.]

* * *

பேனா நண்பர்கள்

1. M. A. ஜனார்த்தனன், 9-1/85, காந்திஜி ரோடு, சிவகாசி.
2. A. S. மணி, கிருஷ்ண விலாஸ், கர்ஸான் ரோடு, கொல்லம்.
3. M. R. பவரத்தினம், M/s சாரி அண் கம்பெனி, 3, அறந்தாங்கி ரோடு, புதுக்கோட்டை.
4. N. M. S. யாகூப், 66-68 கடைத்தெரு, குருநாகல், இலங்கை.
5. மு. ஹ. ஆப்தீன், 90-92 கச்சேரி ரோடு, குருநாகல், இலங்கை.
6. ஆதித்தியன், 7–50 G, கிராஸ் ரோடு, கோயம்புத்தூர்.
7. ஹென்றி, கேப்ரியல், 37, முருகப்ப முதலித் தெரு, சென்னை-7.
8. ராம. சிங்காரம், c/o PL. RM. வீடு, மேலக்கட்டிடம், விராச்சிலை.
9. N. கிருஷ்ணமணி, 9, லக்ஷ்மிநரசிம்மன் ரோடு, சென்னை-17.
10. வே. யோகநாதன், மாறன்குளம் சந்தி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம் (இலங்கை).

* * * *

முடியுமா - விடை:

ராமுவின் பதிலிலேயே சரியான வழி இருக்கிறது. 'நீ போக முடியாது அப்பனே' என்ற வார்த்தைகளின் வரிசைப் படி கோடு போட்டுப் பாருங்கள். முடியும் என்று உங்களுக்குத் தெரியும்.



EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.